**இலங்கை சனநாயக சோசலிச குடியரசின் எட்டாவது பாராளுமன்றத்தின்**

**(முதலாவது அமர்வு)**

பாராளுமன்ற வெளியீட்டுத் தொடர் இல 118

பயனுறுதிமிக்கத் தகவல்களையும் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகளையும் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்தை சேகரித்தல், மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு அக்கறையுடைய தரப்புகளினாலும் மற்றும் அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை சிபாரிசு செய்யும் பொருட்டு

# அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின்

# இடைக்கால அறிக்கை

அரசாங்க கணக்குகள் பற்றிய குழுவின் தவிசாளர்

கௌரவ லசந்த அளகியவன்ன அவர்களினால்

*சமர்ப்பிக்கப்பட்டது.*

2016 நவம்பர் 23 ஆம் திகதி

2016 நவம்பர் 23 ஆம் திகதி அச்சிடுவதற்காக பாராளுமன்றத்தினால் பணிக்கப்பட்டது.

## ஏழாவது பாராளுமன்றத்தின் முதலாவது அமர்வுக்கான பொதுக் கணக்குகள் பற்றிய குழு உறுப்பினர்கள்

1. கௌரவ லசந்த அலகியவன்ன.
2. கௌரவ எஸ். பீ. திசாநாயக்க.
3. கௌரவ மஹிந்த சமரசிங்ஹ.
4. கௌரவ பி. ஹரிசன்.
5. கௌரவ பைஸர் முஸ்தபா.
6. கௌரவ பாலித ரங்கே பண்டார.
7. கௌரவ நிரோஷன் பெரேரா.
8. கௌரவ சுஜீவ சேனசிங்க.
9. கௌரவ இரான் விக்கிரமரத்ன.
10. கௌரவ பந்துல குணவர்தன.
11. கௌரவ விஜித ஹேரத்.
12. கௌரவ வாசுதேவ நாணாயக்கார.
13. கௌரவ நிஹால் கலப்பத்தி.
14. கௌரவ பிமல் ரத்நாயக்க.
15. கௌரவ செயிட் அலி ஸாஹிர் மௌலானா.
16. கௌரவ புத்திக பத்திறண.
17. கௌரவ சீனித்தம்பி யோகேஸ்வரன்.
18. கௌரவ சி. சிறீதரன்.
19. கௌரவ சந்திம கமகே.
20. கௌரவ (டாக்டர்) நளிந்த ஜயதிஸ்ஸ.
21. கௌரவ (டாக்டர்) கவிந்த ஹேஷான் ஜயவர்தன.
22. கௌரவ இ. சாள்ஸ் நிர்மலநாதன்.
23. கௌரவ (திருமதி) ஹிருணிகா பிரேமச்சந்திர .
24. கௌரவ பந்துல லால் பண்டாரிகொட.
25. கௌரவ பிரசன்ன ரணதுங்க.
26. கௌரவ ச. வியாழேந்திரன்.

**உட்குழு உறுப்பினர்கள்**

1. கௌரவ இரான் விக்கிரமரத்ன (தவிசாளர்)
2. கௌரவ பந்துல குணவர்தன
3. கௌரவ செய்யது அலிசாஹிர் மௌலானா
4. கௌரவ டாக்டர். நலிந்த ஜயதிஸ்ஸ
5. கௌரவ டாக்டர். கவிந்த ஹேஷான் ஜயவர்தன

# உள்ளடக்கம்

**தவிசாளரின் குறிப்பு** **01**

**A – அறிக்கை**

A-1 பின்னணி 03

A-2 உட்குழுவினது குறிப்பீடுகளின் தழுவல் 03

A-3 உட்குழு பிரயோகித்த முறையியல்கள் 03

A-4 அவதானிப்புகளும் ஆரம்பக் கலந்துரையாடல்களின் பெறுபேறுகளும் 04

A-5 அரசாங்க வருமானத் தொகுப்பு 06

A-6 சுங்கத் திணைக்களம் 08

அவதானிப்புகள் & விதப்புரைகள் 08

A-7 உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (உ.இ.தி) 12

அவதானிப்புகள் & விதப்புரைகள் 12

A-8 இலங்கை மதுவரித் திணைக்களம் (EDSL) (இ.ம.தி.) 15

அவதானிப்புகள் & விதப்புரைகள் 15

A-9 ஏனைய அவதானிப்புக்கள் 17

A-10 பொதுவான சிபாரிசுகள் 19

**B- பின்னிணைப்பு:**

B-1 குழுவில் கலந்தாலோசிக்கப்பட்ட விடயங்கள் 21

B-2 வினாக்கொத்துக்களும் விடைகளும் 42

## தவிசாளரின் செய்தி

அரசாங்கக் கணக்குக்குழு அரசியலமைப்பின் உறுப்புரை 148 இன் பிரகாரம் பாராளுமன்றத்தால் அதற்கு வழங்கப்பட்ட நிதி மேற்பார்வை தொழிற்பாடுகளை செயற்படுத்தும் வேளையில் அரச நிறுவனங்களில் தகவல் தொழில்நுட்பத்தை அமுல்படுத்துவதில் சில பின்னடைவுகளை அவதானித்தது. இதன் விளைவாக அரச வருமானத்தில் இழப்பு, வெளிப்படைத்தன்மை இல்லாமை மற்றும் கணக்காய்வு செயன்முறைகளில் சிரமங்கள் என்பன இடம்பெறுகின்றன. ஆகவே அரச நிறுவனங்களின் செயற்பாட்டினை மேம்படுத்தும் முகமாக, தகவல் தொழில்நுட்பத் துறையில் அபிவிருத்திக்கான ஒரு முறைமைரீதியான செயன்முறைகளை அமுல்படுத்த குழு தீர்மானித்தது. அரச வருமானத்தை உச்சப்படுதத்துதல், வாடிக்கையாளர் நட்புறவு நடவடிக்கைகளை நிறுவுதல், முகாமைத்துவத்தில் வினைத்திறன் மற்றும் கணக்காய்வை இலகுபடுத்தல் போன்ற இலக்குகளுடன் கௌரவ இரான் விக்கிரமரத்ன அவர்களின் தலைமையில் ஐந்து உறுப்பினர் கொண்ட ஓர் உபகுழு நியமிக்கப்பட்டது. இந்த முனைப்பானது பொதுமக்கள் நம்பிக்கையையும், நல்லாட்சி எண்ணக்கருவையும் நிலைநிறுத்தும் என குழு எண்ணம் கொண்டிருந்தது.

உபகுழு அரசாங்க வருமானத்திற்கான முக்கிய பங்காண்மையாளர்களுடன் பல கூட்டங்களை நடத்தி குழுவின் விசேட அவதானிப்புக்கள் மற்றும் மிகச் செயல் விளைவுள்ளதும் காலத்திற்கு உகந்ததுமான சிபாரிசுகள் அடங்கிய அறிக்கையை COPA குழுவுக்கு சமர்ப்பித்தது. இது பாராளுமன்றத்திற்கு ஓர் இடைக்கால அறிக்கையாகச் சமர்ப்பிக்கப்படுகிறது.

உபகுழுவின் தவிசாளர் கௌரவ இரான் விக்கிரமரத்ன மற்றும் குழுவின் ஏனைய உறுப்பினர்களின் அர்ப்பணிப்பை நான் மிகவும் பாராட்டுகிறேன். COPA ஆலோசகர் திரு. லலித் ஆர்.டி சில்வா, முன்னாள் சுங்கப் பணிப்பாளர் நாயகம் டாக்டர். நெவில் குணவர்தன, உள்நாட்டு இறைவரித் திணைக்கள முன்னாள் ஆணையாளர் நாயகம் திருமதி. மல்லிகா சமரசேகர ஆகியோருக்கு இவ்வறிக்கையைத் தொகுப்பதில் தமது ஒத்துழைப்பை நல்கியவர்களுக்கு நான் நன்றி கூறுகிறேன். குழுவுக்கு நிபுணத்துவத்தை வழங்கிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவரான்மை (ICTA) மற்றும் எம்/எஸ் லங்கா கிளியர் பிறைவேட் லிமிற்றட் ஆகியோருக்கும் நான் நன்றி தெரிவிக்கின்றேன். பாராளுமன்ற செயலாளர் நாயகம், பாராளுமன்ற பிரதிச் செயலாளர் நாயகம், பாராளுமன்ற உதவிச் செயலாளர் நாயகம் மற்றும் அரசாங்க கணக்குக்குழு அலுவலகத்தின் உத்தியோகத்தர்கள் உட்பட பாராளுமன்ற உத்தியோகத்தர்களுக்கும் அத்துடன் கணக்காய்வாளர் தலைமை அதிபதி மற்றும் அவரின் பணியாட்தொகுதி ஆகியோருக்கும் பல்வேறு சவால்களுக்கு இடையிலும் அவர்களிடமிருந்து நான் எதிர்பார்த்த குறையற்ற ஒத்துழைப்பை நல்கியதற்காக அவர்களுக்கு நன்றி தெரிவிப்பதற்காக இச்சந்தர்ப்பத்தைப் பயன்படுத்திக் கொள்கின்றேன்.

**பயனுறுதிமிக்கத் தகவல்களையும் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமைகளையும் பயன்படுத்தி அரசாங்கத்தின் வருமானத்தை சேகரித்தல், மேம்படுத்துதல் ஆகியவற்றுக்கு அக்கறையுடைய தரப்புகளினாலும் மற்றும் அக்கறையுடைய தரப்புகளுக்கு இடையிலும் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகளை சிபாரிசு செய்யும் பொருட்டு பாராளுமன்றத்தின் பொதுக் கணக்குகள் பற்றிய குழுவினால் நியமிக்கப்பட்ட உட்குழுவின் அறிக்கை**

**பின்னணி**

கீழே கையொப்பமிட்டுள்ள நாங்கள் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் பொதுக் கணக்குகள் பற்றிய குழுவினால் மேற்குறித்த உட்குழு நியமிக்கப்பட்டது. ஏழு விரிவான உட்குழுக் கூட்டங்களின் பின்ர் அந்த உட்குழுவுக்குக் குறிப்பீடு செய்யப்பட்டுள்ள விடயங்கள் தொடர்பில் எமது அறிக்கையை மிகவும் மகிழ்ச்சியுடன் முன்வைக்கின்றோம். உட்குழுவுக்கு குறிப்பீடு செய்யப்பட்ட விடயங்களைத் தழுவி உட்குழு பிரயோகித்த முறையியல்கள், ஒவ்வொரு குழுக் கூட்டத்திலும் மேற்கொள்ளப்பட்ட கலந்துரையாடல்களின் சுருக்கமான விபரங்கள் மற்றும் கண்டுபிடிப்புகள், அவை தொடர்பான எமது அவதானிப்புகள் மற்றும் தனி முகவர்நிலையங்களை தேசிய மட்டத்தில் மேம்படுத்துவதற்கான எமது சிபாரிசுகள் என்பன இந்த அறிக்கையில் உள்ளடக்கப்பட்டு முன்வைக்கப்பட்டுள்ளன.

**உட்குழுவினது குறிப்பீடுகளின் தழுவல்**

வெளிப்படைத்தன்மை வாய்ந்த அக்றையுடைய தரப்புகளுக்கு திருப்தி ஏற்படும் விதத்தில் தொழில்முயற்சிகளை மேற்கொள்வதை இலகுபடுத்துதல் என்ற விடயத்தை அடையாளப்படுத்தும் அதே நேரம் வருமானக் கசிவைக் குறைக்கும் பொருட்டு தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தின் உதவியுடன் உச்ச முகாமைத்துவ வினைத்திறனை உத்தரவாதப்படுத்துவதற்கு அரசாங்க முகவர் நிலையங்களினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் தொடர்பில் பொதுக் கணக்குகள் பற்றிய குழுவுக்கு சிபாரிசுகளை முன்வைத்தல்.

**உட்குழு பிரயோகித்த முறையியல்கள்**

(அ) வருமானம் ஈட்டும் முக்கிய நிறுவனங்கள், அரச துறையில் தகவல் தொழில்நுட்ப சேவைகளை வழங்கும் தரப்புகள், கொடுப்பனவுக்காக சேவை வழங்கும் தரப்புகள் மற்றும் அரச துறை வங்கிகள் ஆகியவற்றுக்கு இடையில் பொதுவான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

(ஆ) இலக்குக்கொள்ளப்பட்ட வருமானம் ஈட்டும் திணைக்களங்கள் மற்றும் தேர்ந்தெடுக்கப்பட்ட தொடர்புடைய செயற்பாடுகள், துணை முகவர் நிலையங்கள் மற்றும் சேவை வழங்கும் தரப்புகள் முதலிய தரப்புகளை நோக்காகக் கொண்டு இடைச்செயற்பாடுகள் தொடர்பான கலந்துரையாடல்களை ஏற்பாடு செய்தல்.

(இ) கூட்டங்களின் போது நேரடியாக பிரச்சினைகளை எழுப்பி சிபாரிசுகளை வழங்கி அத்தகைய பிரச்சினைகளுக்குப் பதிலளித்தல்.

(ஈ) உரிய முகவர் நிலையங்களின் முகாமைத்துவத் தகவல் முறைமையை செயற்படுத்தும் தற்போதைய நிலை தொடர்பான அறிக்கையைப் பெற்றுக் கொள்ளல்.

(உ) விஷேட விளக்கங்களைப் பெற்றுக் கொள்ளும் பொருட்டு வினாக்கொத்துக்களை அனுப்பிவைத்தல்.

**அவதானிப்புகளும் ஆரம்பக் கலந்துரையாடல்களின் பெறுபேறுகளும்**

கீழ்காணும் முகவர் நிலையங்களின் பங்குபற்றலில் 2016 ஆம் ஆண்டு மார்ச் மாதம் 24 ஆம் திகதியும் 2016 ஆம் ஆண்டு மே மாதம் 03 ஆம் திகதியும் உட்குழுவினால் இரண்டு ஆரம்பக் கலந்துரையாடல்கள் நடத்தப்பட்டன.

- சுங்கத் திணைக்களம்
- உள்நாட்டு இறைவரித் திணைக்களம்
- மதுவரித் திணைக்களம்
- குடிவரவு மற்றும் குடியகல்வுத் திணைக்களம்
- கம்பனிகள் பதிவாளர் திணைக்களம்
- மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம்
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம்
- நிதி அமைச்சு
- ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்
- பதிவாளர் நாயகத்தின் திணைக்களம்
- கொழும்பு மாநகர சபை
- இலங்கை வங்கி
- மக்கள் வங்கி
- தகவல் தொழில்நுட்ப முகவர் நிலையம்
- வரையறுக்கப்பட்ட லங்கா க்ளியர் கம்பனி

கலந்துரையாடலின் ஆரம்பத்தில் இந்த உட்குழுவை நியமிப்பதற்கான காரணம் பற்றி தவிசாளரினால் தெளிவுபடுத்தப்பட்டது. ஒவ்வொரு முகவர் நிலையமும் அந்தந்த முகவர் நிலையத்தின் முகாமைத்துவத் தகல் முறைமை பயன்படுத்தப்பட்டுள்ள விதம் மற்றும் அந்தந்த முகவர் நிலையம் எதிர்கொள்ளும் சவால்கள், தடைகள் என்பன தொடர்பில் சுருக்கமான சமர்ப்பணங்களை முன்வைக்குமாறு கேட்டுக்கொள்ளப்பட்டது. நிறுவனத்தினுள் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவது தொடர்பான தற்போதைய நிலை மற்றும் அதனை மேம்படுத்துவதற்குப் பொருத்தமான எதிர்காலத் திட்டங்கள் என்பவற்றைத் தெளிவுபடுத்துகின்ற எழுத்திலான ஒரு அறிக்கையைப் பெற்றுத்தருமாறு குழுவினால் அந்த முகவர் நிலையங்களுக்கு கட்டளை விடுக்கப்பட்டது (பின்னிணைப்பு B-2 ஐ பார்க்கவும்).

**எதிர்காலத்தில் பின்பற்றுவதற்கான கீழ்காணும் அவதானிப்புகள்/உத்தேச தகவுதிறன்கள் குழுவின் அடுத்துவரும் கலந்துரையாடல்களில் முன்வைக்கப்பட்டன.**

- ஏற்கெனவேயிருக்கின்ற தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையை உயர்ந்த மட்டத்திற்குக் கொண்டுவருவதன் மூலம் அல்லது தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையினுள் புதிய பிரிவுகளை அறிமுகப்படுத்துவதனூடாக முகவர் நிலையங்களினால் வழங்கப்படும் சேவைகளின் தரத்தை மேம்படுத்தும் ஆற்றல்.
- தொடர்பாடல் நெறிப்படுத்தப்பட்ட ஒரு விதத்தில் நிகழும் போது அதன் வெளிப்படைத்தன்மை ஒப்பீட்டளவில் மேம்படும்.

- ஏனைய கொடுப்பனவு வழிமுறைகளுடன் ஒப்பிடும் போது இலத்திரனியல் கொடுப்பனவு முறை ஒப்பீட்டளவில் இலகுவானதும் பயனுள்ள காலத்தை சேமிக்கக்கூடியதுமாகும்.
- ஒரு சில அரசாங்க நிறுவனங்களில் காணப்படுகின்ற செயல்நடைமுறைகள் தடைகளை ஏற்படுத்தும்.
- தொழில்நுட்ப, முகாமைத்துவ மற்றும் நிருவாகப் பிரச்சினைகள் தொடர்பில் நிறுவனத்தினுள் தேவையான மாற்றங்களைச் செயற்படுத்துவதற்கு வினைத்திறன் வாய்ந்த பயனுள்ள ஒரு பொறிமுறைத்திட்டம் அவசியமாகும்.
- ஆள்ரீதியில் மேற்கொள்ளப்படும் கருமங்களை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை அடிப்படையாகக் கொண்ட முறையியலுக்கு மாற்றும் போது தேவையான இடங்களில் வேலைத்திட்டத்தை மீண்டும் ஒழுங்குபடுத்துதல்.
- கணக்காய்வு மற்றும் ஒழுங்குறுத்துகை முகவர் நிலையங்களுக்கு தொடர்பாடல்களை இலகுவில் வெளிப்படைத் தன்மை வாய்ந்ததாக பகிர்ந்தளித்தல்.

**அரசாங்க வருமானத் தொகுப்பு**

முன்னுரிமையளிக்க வேண்டிய பிரிவுகளை இனங்காணும் நிமித்தம் முதலில் அரசாங்கத்தின் வருமானத் தொகுப்பு பற்றி ஆராய்வதற்கு குழு தீர்மானித்தது.

2015 ஆம் ஆண்டு சேகரிக்கப்பட்ட அரசாங்கத்தின் வருமானத் தொகுப்பு வருமான விடயங்களின் பிரகாரம் வருமான கணக்கீட்டுத் தலைப்புகளுக்கும் உப வகுதிக்கும் இணங்க வகைப்படுத்தப்பட்டுள்ளது.

**அரசாங்க வருமானம் 2015**

| திணைக்களத்தின் பெயர் | விகிதம் |
|---|---|
| சுங்கத் திணைக்களம் | 43.58 |
| உள்நாட்டு இறைவரித் திணைக்களம் | 37.13 |
| மதுவரித் திணைக்களம் | 7.45 |
| உப மொத்தம் | 88.16 |
| ஏனைய சகல அரசாங்க நிறுவனங்களும் | 11.84 |
| மொத்தம் | 100.00 |

**வருமான உப வகுதி**

| திணைக்களத்தின் பெயர் | வருமான விடயம் | மொத்த விகிதம் |
|---|---|---|
| **உள்நாட்டு இறைவரித் திணைக்கள** | | |
| | கூட்டுத்தாபன வருமான வரி | 26.56 |
| | இறக்குமதிகள் மீதான VAT வரி | 15.95 |
| | ஏனைய சேவைகள் மிதான VAT வரி | 14.05 |
| | வட்டி மீதான நிறுத்திவைத்தல் வரி | 11.89 |
| | உற்பத்தி மீதான VAT வரி | 5.51 |
| | நிதி சார்ந்த சேவைகள் மீதான VAT வரி | 5.32 |
| | கூட்டுத்தாபனம் சாராத வ.செ. வரி | 4.99 |
| | தேசத்தைக் கட்டியெழுப்பும் வரி - சேவைகள் | 4.05 |
| | **உப மொத்தம்** | **88.32** |
| | ஏனைய எல்லா வரிகளும் | 11.68 |
| | **மொத்தம்** | **100.00** |
| **சுங்கத் திணைக்களம்** | | |
| | வாகனங்கள் உற்பத்தி மீதான வரி | 36.28 |
| | இறக்குமதித் தீர்வைகள் | 17.55 |
| | சிகரெட்டு உற்பத்தி | 12.99 |
| | துறைமுகங்கள் விமானநிலைய வரி | 9.21 |
| | விஷேட நுகர்வுப்பொருள் வரி | 8.49 |
| | பெற்றோலிய உற்பத்திகள் வரி | 7.32 |

| | | |
|---|---|---|
| | இறக்குமதி செஸ் வரி | 6.90 |
| | **உப மொத்தம்** | **98.74** |
| | ஏனைய எல்லா 9 விடயங்கள் | 1.26 |
| | **மொத்தம்** | **100.00** |
| **மதுவரித் திணைக்களம்** | | |
| | மதுபானம் மீதான வரி | 99.97 |
| | புகையிலை வரி | 0.03 |
| | **மொத்தம்** | **100.00** |

*தகவல்மூலம்: அரசாங்க கணக்குகள் திணைக்களம் - தீவின் கணக்குகள் 2015*

அரசாங்கத்தின் வருமானக் கட்டமைப்பு, தகவல்மூலம் மற்றும் வருமானத்தை சேகரிப்பதற்கு அடிப்படை ரீதியில் பொறுப்புக்கூறும் முகவர்நிலையங்கள் என்பன பற்றி ஆராய்ந்த உட்குழு தனது ஆய்வின் முடிவுகளை மூன்று பிரதான திணைக்களங்களாகிய இலங்கை சுங்கத் திணைக்களம், உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் இலங்கை மதுவரித் திணைக்களம் என்பவற்றுக்கு அனுப்பி வைப்பதற்குத் தீர்மானித்தது. அதே போன்று ஏற்குமதி மற்றும் இறக்குமதி செயற்பாடுகளுடன் நேரடியாக தொடர்புடைய அல்லது மேம்பாட்டிற்குத் தேவையான முக்கிய தகவல்களைப் பெற்றுக்கொள்வதற்காகப் பயன்படுத்தக்கூடிய மேலும் பல நிறுவனங்களை அழைப்பதற்கும் உட்குழு தீர்மானித்தது. உட்குழு அத்தகைய உள்ளகச் செயற்பாடுகள் தொடர்பில் ஐந்து கூட்டங்களை நடத்தி மேலும் தெளிவுபடுத்திக் கொள்ளப்பட்டது. அதன் போது சேகரிக்கப்பட்ட தகவல்கள் விசாரணையின் பொருட்டு இங்கு குறிப்பிடப்பட்டுள்ளன (வினாக்கொத்துக்காகக் கிடைக்கபெற்ற பதில்களுக்கு பின்னிணைப்பு B1 ஐ பார்க்கவும்).

தேர்ந்தெடுக்கப்பட்ட மூன்று திணைக்களங்கள் தொடர்பில் உட்குழு மேற்கொண்ட ஆய்வுகளின் முடிவுகள் கீழே தரப்பட்டுள்ளன.

**சுங்கத் திணைக்களம்**

அரசாங்க வருமானத்தின் மொத்தக் கூட்டுத்தொகையில் 50.62% (சேர்க்கப்பட்ட பெறுமானத்தின் அடிப்படையிலான இறக்குமதித் தீர்வை மற்றும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்காக சேர்க்கப்பட்ட தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி அடங்கலாக) அதிக வீதம் 2015 ஆம் ஆண்டு காலப்பகுதியில் சுங்கத் திணைக்களத்தினால் சேகரிக்கப்பட்டமை கவனத்திற்கொள்ளப்பட்டது. இந்த வருமானம் பிரதானமாக சேகரிக்கப்பட்டிருப்பது இறக்குமதிப் பொருட்கள் இறக்குமதி செய்யப்பட்ட நேரத்தில் சுங்கத் தீர்வையாகவும் மற்றும் உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் உற்பத்தி வரி, சேர்க்கப்பட்ட பெறுமானம் அடிப்படையிலான வரி, விஷேட விற்பனைப் பொருட்கள் வரி, ஏற்றுமதி அபிவிருத்திச் சட்டத்தின் செஸ் வரி, தேசத்தைக் கட்டியெழுப்பல் வரி மற்றும் விமானநிலைய அபிவிருத்தி வரிக் கட்டணம் முதலிய வரிகளிலிருந்தாகும். உற்பத்தி (விஷேட ஏற்பாடுகள்) சட்டத்தின் கீழ் வரும் புகையிலை, பெற்றோலியம் ஆகிய உற்பத்திகள் முதலிய உள்நாட்டில் உற்பத்தி செய்யப்படும் பொருட்கள் தொடர்பிலும் வரிகளை சேர்க்க வேண்டிய பொறுப்பு சுங்கத் திணைக்களத்தை சார்ந்ததாகும்.

வருமானங்களை சேகரிப்பதற்கு மேலதிகமக சமூகம், சுகாதாரம், சுற்றாடல் மற்றும் பாதுகாப்பு முதலியன தொடர்பான பொறுப்புக்களை நிறைவேற்றும் பொருட்டு உரிய நியதிச்சட்ட சபைகளின் உதவியுடன் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி ஆகியன தொடர்பில் காணப்படும் வரையறைகள் மற்றும் தடைகள் என்பவற்றுக்குரிய சட்டங்களை நடைமுறைப்படுத்தும் பொறுப்பும் சுங்கத்திணைக்களத்திற்குரியதாகும்.

இறக்குமதிகளின் அடிப்படையில் காணப்படும் அதிக வருமானங்களின் சேர்வை இனங்கண்ட உட்குழு சுங்கத் திணைக்களத்தின் முகாமைத்துவ முறைமையின் தற்போதைய நிலைமையை இனங்கண்டு அதன் மூலம் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயனுள்ள விதத்தில் பிரயோகிப்பதற்கான சுங்க இறக்குமதிகள் விடுவிப்பு நடவடிக்கையில் தனது கவனத்தைச் செலுத்த உட்குழு தீர்மானித்தது.

ஆகையால் உட்குழு தகவல் தொடர்பாடல் உள்ளீடுகளின் முன்னேற்றம், சுங்க இடர் முகாமைத்துவ முறைமை, இறக்குமதி வரையறைகள் மற்றும் தடைகள் என்பவற்றை மேற்கொள்வதற்கு உரிய இறக்குமதிப் பொருட்களின் விடுவிப்பு நடபடிமுறையினுள் சுங்கத் திணைக்களத்துடன் இணைந்து தொழிற்படுகின்ற முதலீட்டு சபை மற்றும் ஏனைய நியதிச்சட்ட சபைகள் அதாவது இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கை முதலீட்டு சபை, சுகாதார போஷாக்கு மற்றும் சுதேசிய மருத்துவ அமைச்சு, இலங்கைக் கட்டளைகள் நிறுவகம், விளங்கு உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களம், விவசாயத் திணைக்களம் போன்ற நிறுவனங்களின் செயற்பாடுகள் பற்றியும் ஆராயப்பட்டது.

**அவதானிப்புகள்**

சுங்கத் திணைக்களத்தின் முக்கிய பொறுப்பு யாதெனில் வருமானங்களை சேகரித்தல், சட்டவிரோதமான ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் தடைசெய்தல், நியாயமான வியாபாரங்களுக்குத் தேவையான வசதிகளைச் செய்துகொடுத்தல், ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியன தொடர்பான புள்ளிவபிரங்களின் பட்டியலைத் தயாரித்தல் மற்றும் தேவையான தரவுகளை வழங்குதல் முதலியனவாகும் என உட்குழு முதலில் கவனித்தது.

தகல் மற்றும் தொடர்பாடல் துறை தொடர்பில் சுங்கத் திணைக்களம் அடைந்துள்ள முன்னேற்றத்தின் பால் குழு கவனத்தைச் செலுத்தியது. வியாபாரமும் அபிவிருத்தியும் பற்றிய ஐக்கிய நாடுகள் சமவாயத்தினால் தயாரித்து நிருவகிக்கப்படும் ஒரு மென்பாகமான 'ASYCUDA' என அழைக்கப்படும் சுங்கத் தரவுகளை சேகரிக்கும் தானியக்க முறைமையின் புத்தம் புதிய பதிப்பு சுங்கத் திணைக்களத்தினாலும் மற்றும் முதலீட்டு சபையினால்

தற்பொழுது பயன்படுத்தப்படுவதாகத் தெரிவிக்கப்பட்டது. அதே போன்று ‘ASYCUDA’ என்ற மென்பாகம் இன்று ஏறக்குறைய 80 நாடுகளில் பயன்படுத்தப்படுவதாகவும், சர்வதேச வியாபாரத்தின் நவீன தேவைப்பாடுகளை பூர்த்தி செய்துகொள்ளும் பொருட்டு புதிய தொழில்நுட்பங்களைப் பயன்படுத்தி நாளாந்தம் மேம்படுத்தப்படுவதாகவும் தெரிவிக்கப்பட்டது. ஏற்றுமதி மற்றும் இறக்குமதி வியாபாரத்தில் ஈடுபடும் அனைத்துத் தரப்புகளுடனும் இலத்திரனியல் ஊகடத்தினூடாக தொடர்பாடல்களை ஏற்படுத்திற்கொள்வதற்கு சுங்கத் திணைக்களத்தினால் ‘Single Windows’ என்ற ஒரு நிகழ்ச்சித்திட்டம் ஏற்கெனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

தற்பொழுது இலங்கை சுங்கத் திணைக்களம், குடிசன மதிப்பீட்டுப் புள்ளிவிபரவியல் திணைக்களம், நிதி அமைச்சு, இலங்கை மத்திய வங்கி, உள்நாட்டு இறைவரித் திணைக்களம், மோட்டார் வாகனங்கள் பதிவுத் திணைக்களம், வணிகத் திணைக்களம், இலங்கைத் தேயிலைச் சபை, ஏற்றுமதி அபிவிருத்தி சபை முதலிய நிறுவனங்களுடன் ஏற்றுமதி மற்றும் இறக்குமதி தொடர்பான தகவல்கள் பகிர்ந்துகொள்ளப்படுகின்றன. அதே போன்று இலங்கை சுங்கத் திணைக்களத்தினால் e-payment (இலத்திரனியல் கட்டண முறை), e-cusdocs (இலத்திரனியல் சுங்க ஆவணம்) மற்றும் e-manifests (இலத்திரனியல் கப்பல் சரக்குப் பட்டியல்) என பொதுவாக அழைக்கப்படும் இலத்திரனியல் தொடர்பாடல் முறைமையை அரசாங்க இரண்டு வங்கிகளும், ஏற்றுமதித் தரப்புகளும், இறக்குமதித் தரப்புகளும், விடுவித்தலுக்கான முகவர்நிலையங்களும், பொருட்களை ஏற்றியிறக்கும் தரப்புகளும், கப்பல் முகவர்நிலையங்களும் செயற்படுத்தியுள்ளன. மேலும் அக்கறையுடைய தரப்புகளுக்கு அவசியமான தரவுகளும் சுங்கத் திணைக்களத்தின் இணைத்தளத்தின் மூலம் வழங்கப்படுகின்றன.

தற்பொழுது நடைமுறையிலிருக்கின்ற இலத்திரனியல் கட்டண முறைமை இலங்கை வங்கிக்கும் மற்றும் மக்கள் வங்கிக்கும் மாத்திரம் மட்டுப்பட்டுள்ளதாகவும், இலங்கை மத்திய வங்கி மற்றும் வ.ப. லங்கா க்ளியர் கம்பனி ஆகியன இணைந்து அதனை சகல வங்கிகளுடனும் தொடர்புபடுத்துவதற்கு அவசியமான புதிய ஒரு நிகழ்ச்சித்திட்டம் தயாரிக்கப்பட்டு வருவதாகவும் உட்குழு அவதானித்தது. ஏற்றுமதித் தரப்புகளினாலும் மற்றும் இறக்குமதித் தரப்புகளினாலும் இலத்திரனியல் சுங்க வெளியீடுகளை சுங்கத் திணைக்களத்திற்கு வழங்குவதற்காக கப்பல் முகவர்நிலையங்கள் மற்றும் அவற்றின் உப முகவர்நிலையங்கள் என்பவற்றிலிருந்து கப்பல் சரக்குப் பட்டியலைப் பெற்றுக்கொள்ளல் (e-manifests) முறைமை செயற்படுத்தப்பட்டுள்ளது.

எவ்வாறாயினும் பொருட்களை விடுவிக்கும் நடபடிமுறையில் சுங்கத் திணைக்களத்துடன் தொடர்புடைய ஏனைய நியதிச்சட்ட சபைகள் திருப்தியான மட்டத்தில் முன்னேற்றத்தை அடையவில்லை எனன்பதும், அதன் காரணமாக பொருட்களை விடுவிப்பதில் தாமதம் நிலவுகின்றது என்பதும் குழுவினால் அவதானிக்கப்பட்டது.

இவை தொடர்பில், அர்ப்பணிப்பின்மை, பயனுறுதிமிக்க முறையில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தை பயன்படுத்துவதற்காக செயன்முறையை மீள்ஒழுங்கமைப்பு செய்யாமை, தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப வசதிகளின்மை ஆகியன தெளிவாக உணரப்பட்டன. மேலும், வியாபார செயன்முறையை மீள் ஒழுங்கமைத்தல் தொடர்பில் முறையான ஆய்வினை மேற்கொள்ளாமல் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம் மீதான தற்போதைய முதலீடுகள் மற்றும் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பமுறையை முறையாகப்பேணுதல் ஆகியன கவனமாக நோக்கப்படல் வேண்டுமென்பதை உபகுழு உணர்ந்தது.

சட்டபூர்வமான வியாபாரத்தை இலகுபடுத்துமுகமாக, சுங்கத்திலுள்ள தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்திகளானது, சுங்கத்தினுள்ள இடர் முகாமைத்துவ முறைகளுடன்சேர்த்து நோக்கப்படல் வேண்டுமென்பதை உபகுழு உணர்ந்தது. அத்தகைய வியாபாரரீதியான இலகுபடுத்தலானது சரக்குகளை அப்புறப்படுத்துகின்ற செயன்முறையின்பொழுது தேவையற்ற மனித தலையீடுகள் ஏற்படாமல் இருப்பதையும், அத்தோடு அப்புறப்படுத்தலுக்குப்பின்னரான கணக்காய்வு முறைகளை விருத்திசெய்வது தொடர்பில் அதிக கவனத்தைச் செலுத்தக்கூடியதாகவும் இருத்தல் வேண்டும்.

சுங்கத்தில் தற்போது பின்பற்றப்பட்டு வருகின்ற இடர்முகாமைத்துவமுறையை ஏற்றுக்கொள்ளமுடியாது என்பதை உபகுழு அவதானித்தது. இறக்குமதி செய்யப்படுகின்ற சகல விதமான சேர்பிடப்பொருள்களும் தற்போது ஆவணரீதியான சோதனை மற்றும் சரக்குரீதியான சோதனை ஆகியன மேற்கொள்ளப்படுவதாகத் தோன்றுகிறது. இருப்பினும், சுங்கத்தினால் வழங்கப்பட்ட தகவல்களின் பிரகாரம், 98% அதிகமான சேர்பிடப்பொருள்கள் எவ்வித பிரச்சினைகளுமின்றி சுங்கத்தினால் விடுவிக்கப்படுகின்றன. இருப்பினும் சேர்பிடப்பொருள்களை 100% சோதனை செய்வதானது வளங்களை வீணடிக்கின்ற ஒரு செயலாக இருப்பதுடன், சட்டரீதியான வியாபாரத்தை இலகுபடுத்துகின்ற கருத்திற்கு ஏற்புடையதாக காணப்படுவதுமில்லை. காணப்படுகின்ற வளங்களை உச்சமாகப் பயன்படுத்தி இடர்களை வினைத்திறன்மிக்க முறையில் முகாமைத்துவம் செய்யும்முகமாக வருமானம் சேகரித்தல் மற்றும் மட்டுப்படுத்தப்பட்ட, தடைசெய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் இடர் பிரதேசங்களைப் பகுப்பாய்வு செய்யும்முகமாக வினைத்திறன்மிக்க இடர் முகாமைத்துவமுறையொன்று இருத்தல் வேண்டுமென உபகுழு உணர்ந்தது. மேலும், மட்டுப்படுத்தப்பட்ட, தடைசெய்யப்பட்ட பண்டங்கள் தொடர்பில் சம்பந்தப்பட்ட நியதிச்சட்டசபைகளின் ஒத்துழைப்புடன் இடர்முகாமைத்துவமுறையை சுங்கம் விருத்திசெய்தல் வேண்டும். ஊழல் அதிகாரிகள், அரசியல் தலையீடுகள் உள்ளடங்கலாக சகல அம்சங்கள் பற்றிய இடர்கள் ஆகியவற்றை சுங்கம் பகுப்பாய்வு செய்தல் வேண்டும். மற்றும் அத்தகை இடர்களை பொருத்தமான மனித வளங்களைப் பயன்படுத்தி முகாமைத்துவம் செய்தல், ASYCUDA WORLD தெரிவு மொடியூல் மற்றும் எக்ஸ் கதிரியக்க இயந்திரம் போன்ற ஏனைய கருவிகளையும் பயன்படுத்த வேண்டும்.

இரகசியத்தகவல் கசிவதைக் குறைத்தல், குறிப்பாக சுங்கம், முதலீட்டுச்சபை ஆகிய திட்டங்களின்கீழ் இறக்குமதித்தீர்வை வரிகள் செலுத்தப்படாமல் துறைமுகத்திலிருந்து அகற்றப்படும் சரக்குகள் தொடர்பில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்தி தடைக்கட்டு சரக்குகள் தொடர்பில் வினைத்திறன்மிக்க மேற்பார்வை முறையொன்று இருப்பதன் முக்கியத்துவத்தை உபகுழு குறிப்பிட்டது.

இறக்குமதி செய்யப்பட்டவைகளை விடுவித்தல் தொடர்பிலான சுங்கமுறை வழிகளைப் பொறுத்தவரையில் அவை தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப அபிவிருத்திகளுடன் சேர்த்து மீள்ஒழுங்கமைக்கப்படவேண்டுமென்பதையும், வாய்ப்புள்ள சகல சந்தர்ப்பங்களிலும் சுங்க இணையத்தளத்தில் அத்தகைய முறை வழிகள் பிரசுரிக்கப்படவேண்டுமென்பதையும் உபகுழு அவதானித்தது.

சுங்க விசாரணைகள் மற்றும் விசாரணை நடைமுறைகள் ஆகியன திருப்திகரமாக இருக்கவில்லை மற்றும் கூடிய முன்னுரிமை அடிப்படையில் இது நோக்கப்படல்

வேண்டுமென்பதையும் உபகுழு அவதானித்தது. சட்டவிரோத வியாபாரத்தைத் தடுக்குமுகமாக சுங்கத்தினுள் பல்வேறுவிதமான விசாரணைப் பிரிவுகள் காணப்பட்டபொழுதிலும், நோக்கத்தை நிறைவேற்றக்கூடியவிதத்தில் அவை ஒத்திசைவாக செயற்படவில்லை. தாமதங்கள், வருமானஇழப்பு, சட்டவிரோத வியாபாரத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு இட்டுச்செல்கின்ற ஊழல் மற்றும் தொழில்வாண்மையற்ற நடைமுறைகளைத்தவிர்க்கும் முகமாக இத்தகைய நடைமுறைகள் மீளாய்வுசெய்யப்பட்டு, மேம்படுத்தப்படவேண்டுமென உபகுழு உணர்ந்தது.

**விதப்புரைகள்**

சுங்கப் பணிப்பாளர் நாயகத்திற்கு பின்வருவன தொடர்பில் பணிப்புரை விடுவிக்கவும்.

1. சுங்க தனிவிண்டோ முறையை (Window system) நடைமுறைப்படுத்துவதைப் பூரணப்படுத்தவும்.

2. சட்டபூர்வமான வியாபாரத்தை இலகுபடுத்தும் முகமாகவும், சட்டவிரோத வியாபாரத்திற்கு எதிராக செயற்படும் முகமாகவும் சுங்கத்தில் வினைத்திறன்மிக்க இடர்முகாமைத்துவமுறையொன்றை தாபித்தல். ஊழல் அதிகாரிகள், அரசியல் தலையீடு உள்ளடங்கலாக சகல அம்சங்களுடன் தொடர்புடைய இடர்களை இந்த முறை பகுப்பாய்வு செய்வதுடன் அத்தகைய இடர்கள் காணப்படுகின்ற மனித மற்றும் ஏனைய வளங்களை உச்சமாக பயன்படுத்தி முகாமைத்துவம் செய்தல்.

3. தனி ‘விண்டோ’ முறை மற்றும் இடர்முகாமைத்துவமுறை ஆகிய சூழமைவுகளில் இறக்குமதி, ஏற்றுமதி சுங்க நடைமுறைகளை மீளாய்வுசெய்து, சகல பங்கீட்டுப்பாட்டாளர்களின் நன்மைகருதி புதிய நடைமுறைகளை சுங்க இணையத்தளத்தில் வெளியிடல்.

4. தாமதங்கள், வருமான இழப்பு, சட்டவிரோத வியாபாரத்தைப் பாதுகாத்தல் ஆகியவற்றிற்கு இட்டுச்செல்கின்ற ஊழல் மற்றும் தொழில்வாண்மையற்ற நடைமுறைகள் ஆகியவற்றை தவிக்கும்முகமாக சுங்க தடுத்தல் பிரதேச கட்டமைப்பு மற்றும் புலனாய்வுகள், விசாரணை நடைமுறைகள் ஆகியவற்றை மீளாய்வுசெய்து சிறப்பன தடுத்தல் கட்டமைப்பு, பொருத்தமான விசாரணைகள், விசாரணை நடைமுறைகள் ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல்.

5. தனி விண்டோ முறையை வினைத்திறன்மிக்க முறையில் நடைமுறைப்படுத்துவதற்காக சம்பந்தப்பட்ட சட்டங்களில் அவசியமான திருத்தங்களை கொண்டுவருவது பற்றி ஆராய்தல்.

6. சுங்கம், முதலீட்டுச்சபை ஆகியவற்றின்கீழ் அனுமதிக்கப்பட்ட தடைக்கட்டு சரக்குகளை வினைத்திறன்மிக்க முறையில் மேற்பார்வை செய்வதற்காக தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முறையை விருத்திசெய்தல்.

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (*IRD*)**

சேர் பெறுமதி வரி, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி, வருமானவரி, கூட்டுறவுவரி ஆகியவற்றை சேகரிப்பதற்கு பொறுப்பாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் இருப்பதாக உபகுழு குறிப்பிட்டது. மேலும் இறக்குமதிகளிலிருந்து சேர் பெறுமதி வரி, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றை சேகரிப்பது தொடர்பான பொறுப்பு சுங்கத்திற்கு வழங்கப்பட்டிருப்பதாக உபகுழு குறிப்பிட்டது. இச்சூழமைவில், அரசாங்கத்திற்கு இரண்டாவது வரி சேகரிக்கும் திணைக்களமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களம் காணப்படுகிறது. 2015 தரவுகளின் பிரகாரம் அரசாங்கத்தின் மொத்த வருமானத்தில் 30.08% (சுங்கத்தினால் சேகரிக்கப்படுகின்ற இறக்குமதி சேர் பெறுமதி வரி, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றைத் தவிர) இது சேகரிக்கின்றது.

**அவதானிப்புகள்**

உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தினால் சேர் பெறுமதி வரி, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி ஆகியவற்றை நேரடியாக சேகரிப்பது தொடர்பில், குறிப்பாக பண்டங்கள் (பொருட்கள்) தொடர்பில் சுங்கத்தினால் பின்பற்றப்படுகின்ற இசைவுறுதிப்பட்ட பொருட்குறியீட்டு முறைமையைப்போல் முறையான பெயரிடல் முறை காணப்படவில்லையென்பதையும், அத்தோடு சுங்கத்தினால் ஏற்றுக் கொள்ளப்பட்டு நடைமுறைப்படுத்தப்பட்டுவருகின்ற உலக வர்த்தக அமைப்பு பெறுமதியிடல்முறைபோன்ற முறையான பெறுமதியிடல்முறை இல்லை என்பதையும், உபகுழு குறிப்பிட்டது. பண்டங்கள் வரியிடல் தொடர்பில் அத்தகைய முறைகள் இன்மையின் காரணமாக இது ஊழல் மிகுந்த நடவடிக்கைகளுக்கு இட்டுச்செல்லும் என்பதையும், இதனால் வருமானம் இழக்கப்படலாம் என்பதையும் உபகுழு உணர்ந்தது. சேர் பெறுமதி வரி தொடர்பில் பதிவுசெய்த நபர்களின் எண்ணிக்கை 15696 எனவும், நிதி நிறுவனங்களின் எண்ணிக்கை 229 எனவும் அறிக்கையிடப்பட்டது. இந்த இலக்கங்கள் உண்மையான நிலைமையை புலப்படுத்தவில்லையென உபகுழு உணர்ந்தது. அரசாங்கத்திற்கு சேரவேண்டிய சேர் பெறுமதி வரி நிலுவை வருமானத்தை அறவிடுவதற்கு பொருத்தமான பொறிமுறையொன்றை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் விருத்திசெய்ய வேண்டுமென உபகுழு உணர்ந்தது.

வருமானவரி வருமானத்தைப் பொறுத்தவரையில், தற்போதைய கோவைகளின் எண்ணிக்கை தனிப்பட்ட வருமானவரிக் கோவைகள் 135170, அரச சார்பற்ற நிறுவனங்கள் 13169, பரஸ்பர நிதியம் போன்றவை உண்மையான நிலைமையை புலப்படுத்தவில்லை. தனிப்பட்ட வருமானவரிக் கோவைகளை திறந்தாலென்ன அல்லது திறக்காவிட்டாலென்ன நாட்டிலுள்ள ஒவ்வொரு வயதுவந்த நபரிடமிருந்தும் மதிப்பீடு செய்வதற்கான பிரகடனமொன்றைப் பெற்றுக்கொள்வதற்கான பொறிமுறை இருத்தல் வேண்டுமென உபகுழு உணர்ந்தது. இதனை நடைமுறைப்படுத்துவது சிரமமான செயற்பாடு எனில், தற்போது 06 மில்லியனுக்கும் அதிகமான வாகனங்கள் பதிவுசெய்யப்பட்டதாக அறிவிக்கப்பட்டதன் காரணமாக உள்நாட்டு இறைவரித் திணைக்களமானது ஆகக்குறைந்தது தரவுகளை டி.எம்.டி உடன் பகிர்ந்துகொள்ள வேண்டுமென உபகுழு கருதியது. இத்தகவல்களை மோட்டர்வாகன ஆணையாளர் தலைமையதிபதியுடன்

பகிர்ந்து கொள்வதில் எவ்வித சட்டரீதியான தடைகளும் இல்லையென உபகுழுவிற்கு அறிவிக்கப்பட்டிருந்தது.

கூட்டுறவு வரிகளைப் பொறுத்தவரையிலும்கூட கூட்டுறவு வரிக்கோவைகளின் தற்போதைய எண்ணிக்கை (47,154) உண்மையான நிலைமையை புலப்படுத்தவில்லையென உபகுழு கருதியது. கம்பனிப் பதிவாளர் திணைக்களத்துடன் தகவல்களை பரிமாறிக்கொள்வதன்மூலம் இது தொடர்பில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஆராயவேண்டும்.

காணப்படுகின்ற பொருத்தமான மனித வளங்கள், தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பம், ஏனைய வளங்கள் ஆகியவற்றை உச்ச அளவில் பயன்படுத்தி வருமானம் பற்றிய இரகசியங்கள் கசிவதை குறைக்கும் முகமாக பிரகடனம், வரிக்கோவைகள் தொடர்பான கணக்காய்வு நடைமுறை மற்றும் புலனாய்வு நடைமுறைகள் ஆகியன மிகக் கவனமாக ஆராயப்படல் வேண்டுமென்ற கருத்தை உபகுழு கொண்டிருந்தது.

தற்சமயம் சிங்கபூர் அரசாங்கத்தின் உதவியுடன் வருமான நிர்வாக முகாமைத்துவத் தகவல்முறையை (RAMIS) நடைமுறைப்படுத்தும் செயற்பாட்டில் உள்நாட்டு இறைவரித் திணைக்களம் ஈடுபட்டுள்ளது. இக்கருத்திட்டம் 2014 ஜூலையில் ஆரம்பிக்கப்பட்டது. இதன் முதற்கட்டம் 2016 செப்டம்பரில் பூரணப்படுத்தப்படும், இரண்டாம் கட்டம் 2016 டிசம்பரில் பூரணப்படுத்தப்படும்.

பங்கீட்டுப்பாட்டாளர்களுடன் வியாபாரத்தை இலகுவாக மேற்கொள்கின்ற வழிமுறைகளை மேற்கொள்கின்ற அதேவேளை அரசாங்கத்திற்கான நிலுவை வருமான சேகரித்தலை உறுதிப்படுத்தக் கூடியவிதத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வினைதிறன்மிக்க, பயனுறுதிமிக்க முகாமைத்துவமுறையை மேற்கொள்ளுமுகமாக கையேடுமுறை மற்றும் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல்முறை (RAMIS) ஆகியவற்றை மேற்பார்வை செய்யும்முகமாக உள்ளக கணக்காய்வு முறையை மேம்படுத்துவது முக்கியமானது என உபகுழு கருதியது.

**விதப்புரைகள்**

**உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் ஆணையாளர் நாயகம் பின்வருவன தொடர்பில் பணிக்கப்படல் வேண்டும்:**

1. சுங்கத்தினால் நடைமுறைப்படுத்தப்படுகின்ற அத்தகைய முறைகளைப் பரிசீலனைக்கு எடுத்து சேர்பெறுமதி வரி, நாட்டைக் கட்டியெழுப்புதல் வரி தொடர்பிலான பண்டங்கள் (பொருட்கள்) தொடர்பிலான அரசாங்கத்திற்கான வரி நிலுவையைச் சேகரிக்கும் முகமாக சிறப்பான பெயரிடல் முறை, வகைப்படுத்தல் முறை, பெறுமதியிடல் முறை ஆகியவற்றை நடைமுறைப்படுத்தல்; அரசாங்கத்திற்கான சேர்பெறுமதி வரி நிலுவை வருமானத்தை அறவிடும் முகமாக சேர்பெறுமதி வரி பதிவுகளை அதிகரிப்பதற்குப் பொருத்தமான பொறிமுறையொன்றை விருத்தி செய்தல்.

2. அரசாங்கத்திற்கான நிலுவை வருமானத்தை அறவிடும் முகமாக புதிய வரிக்கோவைகளை ஆரம்பிப்பதற்காக டி.எம்.டி. இடம் காணப்படுகின்ற தரவுகள் போன்ற அவசியமான தரவுகளைச் சேகரிக்கும் முகமாக வினைத்திறன் மிக்க முறையொன்றை நடைமுறைப்படுத்தல்.

3. அரசாங்கத்திற்கான கூட்டுறவு வரி வருமான நிலுவையை அறவிடும் முகமாக புதிய கூட்டுறவு வரிக் கோவைகளை ஆரம்பிப்பதற்காக கம்பனி பதிவாளர் திணைக்களத்திடம் காணப்படுகின்ற தரவுகளைப் பகிர்ந்துகொள்ளும்முகமாக த.தொ.தொ. முறையை விருத்தி செய்தல்.

4. பங்கீடுபாட்டாளர்களுடன் வியாபாரத்தை இலகுவாக மேற்கொள்கின்ற வழிமுறைகளைக் கையாளுகின்ற அதேவேளை, அரசாங்கத்திற்கான நிலுவை வரி வருமானத்தை உறுதிப்படுத்தக்கூடிய விதத்தில் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தில் வினைத்திறன்மிக்க முகாமைத்துவ முறையொன்றை ஏற்படுத்தும் நோக்கில் வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறை (RAMIS) அபிவிருத்திகளின் பிரகாரம் வினைத்திறன் மிக்க இடர் முகாமைத்துவம் மற்றும் கையேடு செயன்முறையை ஒழுங்கமைத்தல் ஆகியவற்றின்மூலம் எவ்வித தாமதமுமின்றி வருமான நிர்வாக முகாமைத்துவ தகவல் முறையை நடைமுறைப்படுத்தல்.

## இலங்கை மதுவரித் திணைக்களம் (EDSL) (இ.ம.தி.)

அரசாங்கத்தின் மொத்த வருமான சேகரிப்பில் 7.45% ஐ மதுவரித் திணைக்களம் சேகரித்ததாக 2015இல் அவதானிக்கப்பட்டது. மதுவரிக் கட்டளைச் சட்டம், புகையிலை வரிச் சட்டம் ஆகிய ஏற்பாடுகளின் கீழ் வருமானத்தைச் சேகரித்தல், சட்ட விரோத செயற்பாடுகளைத் தடுத்தல் ஆகியவற்றிற்கு இ.ம.தி. பொறுப்பாக இருக்கின்றது. அபின் மற்றும் அபாயகரமான மருந்துப் பொருட்கள் சட்டளைச் சட்ட ஏற்பாடுகளின் கீழ் சட்டத்தை அமுல்படுத்தும் நிறுவனமாக இ.ம.தி. உம் செயற்படுகிறது.

**அவதானிப்புகள்**

மது, புகையிலை ஆகியவற்றிற்கான உற்பத்தி வரியைச் சேகரிக்கும் பொறுப்பு இலங்கை மதுவரித் திணைக்களத்திடம் காணப்படுவதாக உபகுழு குறிப்பிட்டது. இருப்பினும், இ.ம.தி. னால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானத்தில் மதுவிலிருந்து சேகரிக்கப்பட்ட உற்பத்தி வரி மாத்திரம் 99.7% ஆகும். ஆகவே, மது தொடர்பிலான வருமான சேகரிப்பு மற்றும் அதனோடு தொடர்புடைய சாத்தியப்பாடுள்ள வருமான இழப்பு, த.தொ.தொ., இடர்முகாமைத்துவம் ஆகியவற்றின்மூலம் முகாமைத்துவ முறையில் சாத்தியப்பாடுள்ள மேம்பாடுகள் ஆகியன தொடர்பில் கவனம் செலுத்துவதற்கு உபகுழு தீர்மானித்தது.

தீர்வையற்ற கடைகள், சட்டவிரோத எதனோல் இறக்குமதி, உள்நாட்டில் சட்டவிரோதமாக உற்பத்தி செய்யப்படும் எதனோல் உள்ளடங்கலாக சுங்க மதுசார் கடப்பாடுகள் தொடர்பில் இழக்கப்படும் வருமானம் ஆகியனவே பிரதான வருமான இழப்புக் காரணிகளாகத் திகழ்வதாக உபகுழு குறிப்பிட்டது. மதுசார் குடிவகைகளின் முக்கிய சேர்வை பொருளான எதனோல் வேறு நோக்கங்களுக்காகக் கைத்தொழில் துறைகளில் பயன்படுத்தப்பட்டு வருகிறது. அத்தகைய எதனோல் சிலவேளைகளில் அருந்துவதற்கு உகந்தது அல்ல, சட்டவிரோத மதுவைத் தயாரிப்பதற்காகத் தவறாக இது பயன்படுத்தப்படுகிறது. சட்டவிரோத மதுவைத் தயாரிக்கும் பொருட்டு, கரும்பை பிரதான மூலப்பொருளாகப் பயன்படுத்தி உள்நாட்டில் எதனோல் தயாரிக்கப்படுகிறது. இத்தகைய சட்டவிரோத மதுவின் காரணமாக வருமானம் இழக்கப்படுவதுடன், சுகாதார ரீதியான பிரச்சினைகளும் ஏற்படுகின்றன.

சட்டவிரோத உற்பத்திக்கு எதிராக செயற்படும் முகமாக, முறைசார்ந்த இடர்முகாமைத்துவ முறைகள் இல்லையென உபகுழு அவதானித்தது.

தீர்வையற்ற கடைகள் உள்ளடங்கலாக சுங்க மதுசார் கடப்பாடுகளிலிருந்து இழக்கப்படும் வருமானம் தொடர்பில் இ.ம.தி. ஆனது சுங்கத்துடன் இணைந்து கூட்டு நிகழ்ச்சித் திட்டங்களை மேற்கொள்ள வேண்டுமெனவும், வினைத்திறன் மிக்க இடர் முகாமைத்துவ முறையைத் தாபிக்க வேண்டுமெனவும் உபகுழு கருதியது. இடர் பிரதேசங்களை இனங்காணும் முகமாக, முதலாவதாக கடந்த ஐந்து வருடங்களாக சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட துப்பறிதல்கள் ஆராயப்பட்டு வினைத்திறன்மிக்க இடர்முகாமைத்துவ முறைமூலம் இடர்கள் முகாமைத்துவம் செய்யப்படல் வேண்டும்.

சட்டவிரோத மதுவை உற்பத்தி செய்யும் முகமாக இறக்குமதி செய்யப்படுகின்ற எதனோல் தொடர்பிலான இடர் பிரதேசங்களை அடையாளம் காண்பதற்கும் வினைத்திறன் மிக்க இடர் முகாமைத்துவமுறை மூலம் இடர்களை முகாமைத்துவம் செய்வதற்கும் கடந்த ஐந்து வருடங்களாக சுங்கத்தினால் மேற்கொள்ளப்பட்ட துப்பறிதல்கள் பற்றிக் காணப்படுகின்ற தகவல்களுடன் விரிவான ஆய்வொன்றினை இ.ம.தி. மேற்கொள்ள வேண்டுமென உபகுழு கருதியது.

சட்டவிரோத மதுவிற்காக உள்ளூரில் உற்பத்தி செய்யப்படும் எதனோலைப் பொறுத்தவரையில், இதுதொடர்பில் சம்பந்தப்பட்ட சகல பங்கீடுபாட்டாளர்களின் பங்குபற்றுதலுடன் மிகக் கவனமாக ஆய்வுகள் மேற்கொள்ளப்படல் வேண்டும்.

முதலாவதாக இதற்காக பயன்படுத்தப்படும் மூலப்பொருள் மூலங்கள் மற்றும் சட்டவிரோத மது தயாரிக்கும் முறை ஆகியன பற்றி அறிந்துகொள்ள வேண்டும். அத்தோடு, இடர் பிரதேசங்களை அடையாளம் கண்டு வினைத்திறன் மிக்க இடர் முகாமைத்துவ முறைமூலம் இடர்கள் முகாமைத்துவம் செய்யப்பட வேண்டுமென உபகுழு கருதியது.

சட்டவிரோத செயற்பாடுகளை உற்சாகமிழக்கச் செய்யும் முகாமாக சில படிமுறைகளை இ.ம.தி. எடுத்துள்ளதாகவும், ஆனால் சட்டவிரோத வியாபாரத்தை உற்சாகமிழக்கச் செய்கின்ற அதேவேளை அவசியமான வருமானத்தைச் சேகரிக்கும் முகமாக வரிக்கொள்கையை அவர்கள் மீளாய்வு செய்ய வேண்டுமென உபகுழு கருதியது. (உதாரணம்) வரிகளை அதிகரித்தல், சட்டரீதியான கைத்தொழில் பாவனைக்கென இறக்குமதி செய்கின்ற எதனோல் இறக்குமதி அனுமதிப் பங்குகளைக் குறைத்தல் ஆகியன தேவையான வருமானத்தைச் சேகரிப்பதற்கும் சட்ட விரோத வியாபாரத்தை ஊக்கமிழக்கச் செய்வதற்கும் தீர்வாக அமையாது.

த.தொ.தொ. தொடர்பில் மதுசார் வருமானத்தை சிறப்பாக முகாமைத்துவம் செய்யும் நோக்குடன் முறையொன்றை வடிவமைப்பதற்காக மதுவரித் திணைக்களத்துடன் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மை ஈடுபட்டுள்ளதாக உபகுழுவிற்கு அறிவிக்கப்பட்டது.

**விதப்புரைகள்**

**மதுவரி பணிப்பாளர் நாயகம் பின்வருவன தொடர்பில் பணிக்கப்படல் வேண்டும்**

1. சட்டபூர்வமான வியாபாரத்தை இலகுபடுத்துமுகமாகவும், சட்டவிரோத வியாபாராத்திற்கு எதிராக செயற்படுமுகமாகவும் வினைத்திறன்மிக்க இடர்முகாமைத்துவ முறையொன்றைத் தாபித்தல். ஊழல் அதிகாரிகள், அரசியல் தலையீடுகள் உள்ளடங்கலாக சகல அம்சங்கள் தொடர்பிலான இடர்கள் பற்றியும் இம்முறை பகுப்பாய்வு செய்தல் வேண்டும். மற்றும் காணப்படுகின்ற மனித, ஏனைய வளங்களுடன் த.தொ.தொ. உச்ச அளவில் பயன்படுத்தி அத்தகைய இடர்களை முகாமைத்துவம் செய்தல் வேண்டும்.

2. சட்ட விரோத வியாபாரத்தை ஊக்கமிழக்கச் செய்து, சட்டபூர்வமான வியாபாரத்தை இலகுபடுத்துகின்ற அதேவேளை, தேவையான வருமானத்தைச் சேகரிப்பதற்காகத் தற்போதைய மதுவரிக் கொள்கையை மீளாய்வு செய்து, பொருத்தமான வரிக்கொள்கையொன்றினை நிதி அமைச்சிற்கு விதப்புரை செய்தல்.

3. திணைக்களத்தின் நோக்கங்களை அதிக வினைத்திறனுடனும் பயனுறுதித் தன்மையுடனும் அடையுமுகமாக அவசியமான தரவு மையமொன்றைக் கட்டியெழுப்பி, சகல பங்கீடுபாட்டாளர்களுடன் சம்பந்தப்பட்ட தரவுகளை பகிர்ந்து தொடர்பாடுவதற்குத் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்ப முகவராண்மையின் கலந்தாலோசனையுடன் பொருத்தமான த.தொ.தொ. முறையைத் தாபித்தல்.

4. சட்டவிரோத எதனோல் இறக்குமதி, சட்டவிரோத எதனோல் உற்பத்தி, சட்டவிரோத மது உற்பத்தி ஆகியன தொடர்பில் இ.ம.தி., இலங்கை சுங்கம், இலங்கை பொலிஸ் ஆகியவற்றினால் கடந்த ஐந்து வருடங்களாக மேற்கொள்ளப்பட்ட (2012 – 2016) துப்பறிதல்கள் தொடர்பில் விரிவான ஆய்வொன்றினை மேற்கொண்டு, இனங்காணப்பட்ட இடர் பிரதேசங்கள், வருமான இழப்பு மற்றும் சுகாதாரப் பிரச்சினைகள் ஆகியன தொடர்பிலான இடர்களை முகாமைத்துவம் செய்யும் முகமாக மேற்கொள்ளப்பட்ட பின்னூட்டல் நடவடிக்கைகள் தொடர்பில் விரிவான அறிக்கையொன்றினை

ஆறுமாத காலப்பகுதியினுள் அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவிடம் சமர்ப்பித்தல்.

**ஏனைய அவதானிப்புக்கள்**

குழுவின் முன்னே அழைக்கப்பட்ட ஏனைய முகவராண்மைகளின் ICT பாவனை தொடர்பாகவும், முக்கிய வருமானம் ஈட்டும் முகவராண்மைகளின் ICT முறைமைகளுடனான அந்நிகழ்ச்சித்திட்டங்களின் ஒன்றுக்கொன்று தொடர்புபடும் அம்சங்கள் தொடர்பாகவும் பின்வரும் நிலைமைகளை உபகுழு அவதானித்தது.

மோட்டார் போக்குவரத்து திணைக்களத்துடன் (DMT) மோட்டார் வாகனங்களின் முக்கிய தரவுகளை சுங்கம் பகிர்ந்துகொண்டபொழுதிலும் சுங்கத்துடனும் ஏனைய சட்ட அமுலாக்கல் முகவராண்மைகளுடனும் பதிவுசெய்யப்பட்ட வாகனங்கள் மீதான தகவல்களைப் பகிர்வதற்கு எந்த முறைமையும் இருக்கவில்லை. பதிவுசெய்யப்படாத சட்டத்திற்கு மாறான வாகனங்கள் வீதியில் உள்ளன என்ற உண்மையின் நிமித்தமாக மோட்டார் வாகனங்களின் சட்டத்திற்கு மாறான வர்த்தகத்திற்கு எதிராகப் போராடும் முகமாக சுங்கம் மற்றும் இலங்கைப் பொலிசாருடன் அவ்வாறான தகவல்களைப் பகிர்ந்துகொள்வதற்கு மோட்டார் போக்கவரத்து திணைக்களத்தில் ICT முறைமையை முன்னேற்றுவது முக்கியமானது என உபகுழு உணர்ந்தது. உள்நாட்டு இறைவரித் திணைக்களம் (IRD) DMT உடன் புதிய வரிக்கோப்புகளைத் திறப்பதற்கு அவர்களுக்கான அடிப்படைத் தகவல்களை DMT உடன் பரிமாறிக் கொள்ளவேண்டும். DMT ஆனது ICT முறைமையை மோட்டார் வாகனங்களைப் பதிவுசெய்வதற்கும், மோட்டார் வாகனங்களை மாற்றிக்கொடுப்பதற்கும், வாகனசாரதி அனுமதிப்பத்திரங்களை வழங்குவதற்கும் இப்போது பயன்படுத்துவதாக உபகுழு அவதானித்தது. எல்லா (17) மாவட்ட அலுவலகங்களை உட்படுத்தியும், குறைந்தபட்ச மனித இடையீட்டுடனும் இணையத்தள அடிப்படையிலான பதிவு முறைமையொன்றினை அமுல்படுத்துவதற்கு எதிர்பார்த்து இருக்கும் E மோட்டாரிங் கருத்திட்டம் ஒன்றை அமுல்படுத்துவதற்கு DMT திட்டம் கொண்டிருப்பதாக மேலும் தெரிவிக்கப்பட்டது.

கம்பனிகள் பதிவு திணைக்களத்தில் ICT யின் தற்போதைய பிரயோகமானது மிகவும் குறைந்தபட்ச மட்டத்தில் இருப்பதாக உபகுழு அவதானித்ததுடன், ICT தீர்வுகளை அமுல்படுத்துவதானது நிறுவன வினைத்திறன்களை அதிகரிக்கும் அதேவேளையில் IRD மற்றும் ஏனைய தொடர்புடைய பங்காண்மையாளர்களுக்கு முக்கியமான தகவல்களை வழங்குவதை வசதிப்படுத்தும் எனவும் அது அவதானித்தது. திணைக்களத்தில் ஒரு முற்றுமுழுதான ICT முறைமையை அமுல்படுத்துவதற்காக கூறுவிலை வழங்கலானது விரைவில் இறுதிப்படுத்தப்படுமெனவும், 2017 ஏப்ரல் 30 ஆம் திகதியளவில் மொத்த அமுல்படுத்தல் பூர்த்தி செய்ய எதிர்பார்க்கப்படுகிறது எனவும் அறிக்கையிடப்பட்டது.

ஆட்பதிவு திணைக்களம் (DRP) யினால் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை (ENIC) வழங்குவது மீதான கருத்திட்டத்தினை பூர்த்திசெய்தல் சில சட்டத் தடைகளின் நிமித்தமாக தாமதிக்கப்பட்டுள்ளது எனவும், சட்டத்திற்கு தேவையான திருத்தங்களைச் செய்தபின்னர் மீள ஆரம்பிக்கப்படுமெனவும் உபகுழு அவதானித்தது. திணைக்களமானது ENIC அமுல்படுத்தலை ஒன்பது மாத காலப்பகுதிக்குள் பூர்த்தி செய்வதற்கு திட்டமிட்டு

இருந்தது. திணைக்களமானது சட்ட ஏற்பாடுகளுக்குள் ஏனைய சில புற முகவராலயங்களுடன் சில தகவல்களை பகிரக்கூடியதாக இருந்தது எனவும், தற்பொழுது IRD ஆனது NIC யின் அதிகாரபூர்வத்தன்மையை சரிபார்க்கக் கூடியதாக உள்ளது எனவும் அறிக்கையிடப்பட்டது.

பதிவாளர் நாயகம் திணைக்களம் (DRG) ஏற்றுமதி இறக்குமதி கட்டுப்பாட்டு திணைக்களம் (DIEC) மற்றும் கொழும்பு மாநகரசபை ஆகியன தமது சொந்த ICT நிகழ்ச்சித்திட்டங்களை அமுல்படுத்தும் செயன்முறையில் உள்ளன. அதேவேளையில் சுகாதார அமைச்சின் உணவுக்கட்டுப்பாட்டு அலகு மற்றும் விவசாய திணைக்களத்தின் தொற்றுநோய்க் காப்புப்பிரிவு ஆகியவற்றுக்கு இலத்திரனியல் ரீதியான சுங்க சரக்கு தடையொழிப்பு செயன்முறையில் தேவைப்படும் சிபாரிசுகளைப் பெற்றுக் கொள்வதற்கு சுங்கத்தால் வசதிகள் வழங்கப்படுவதாகவும் உபகுழு அவதானித்தது.

சரக்குகளைப் பரிசோதித்தல், மாதிரிகளைப் பகுப்பாய்வுசெய்தல், கட்டணங்களையும், அறவீடுகளையும் சேகரித்தல் போன்ற ஒன்றுடன் ஒன்று மேற்கவியும் விடயங்களில் உரிய அதிகாரிகளுக்கிடையில் செயல்விளைவுடைய ஒத்துழைப்புடன் அவைகள் இலகுபடுத்தப்பட்டு மீளாய்வு செய்யப்படவேண்டுமென உபகுழு அவதானித்தது. உதாரணத்திற்கு ஏனைய நியாயதிக்க அமைப்புக்களால் அவற்றின் சேவைகளுக்காக கொடுப்பனவு சேகரிக்கப்படுவதை E கொடுப்பனவு முறைமையூடாக ஏனைய வரிகள் மற்றும் கொடுப்பனவுகளுடன் சேர்த்து அக்கொடுப்பனவுகளையும் பெற்றுக் கொள்ளும்படி சுங்கத்தைக் கேட்டுக்கொள்ளவதன் மூலம் இலகுபடுத்தக் கூடியதாக இருக்கும்.

ICTயை பிரயோகிப்பதுடன், இலத்திரனியல் ஒப்பங்கள் போன்ற உரிய சட்டவாக்கத்திற்கான திருத்தங்கள் என்பன கவனத்தில் கொள்ளப்பட வேண்டுமெனவும், கூடுமான விரைவில் அமுல்படுத்தப்பட வேண்டுமெனவும் உபகுழு அவதானித்தது.

இணையவழிக் கொடுப்பனவு வசதி தொடர்பாக (E கொடுப்பனவு) தற்போதைய ஏற்பாடானது இரண்டு அரச வங்கிகளுடன் மாத்திரம் பணியாற்றுவதற்கு வரையறுக்கப்பட்டுள்ளதை உபகுழு அவதானித்தது. ஏனைய வங்கியுடன் கணக்கு வைத்திருக்கும் வாடிக்கையாளர்கள் தமது கொடுப்பனவுகளை ஏனைய வங்கிகளால் வழங்கப்பட்ட கொடுப்பனவு கட்டளைகள் ஊடாகவோ அல்லது காசாகவோ மாத்திரமே செலுத்தவேண்டியிருக்கும். மத்தியவங்கி, ICTA, லங்கா கிளியர் மற்றும் நிதியமைச்சுக்களின் பங்குபற்றுகையுடன் ஏனைய வங்கிகளின் ஊடாகவும் கொடுப்பனவுகளை இணையவழி செய்ய வசதிப்படுத்துவதற்கான ஒரு நிகழ்ச்சித்திட்டம் மேற்கொள்ளப்பட்டுக் கொண்டிருப்பினும் பண மாற்றத்திற்கான வெட்டு நேரம், தனித்த நிதி மற்றும் ஒன்றின் உயர்ந்தபட்ச எல்லை, நிதி மாற்றத்திற்கான செலவினம் போன்ற ஏற்பாடுகளில் உள்ள வரையறைகளின் நிமித்தமாக இறுதித் தீர்மானம் எட்டப்படவில்லை. பிரதான வருமானம் ஈட்டும் திணைக்களங்களை வங்கிக் கணக்குகளைத் திறப்பதற்கு வெறுமனே அனுமதித்தல் மூலம் மற்றும் அந்த வங்கிகள் சேகரித்த பணத்தை உடனடியாகவோ அல்லது சிக்கனமாகவோ பயன்படுத்துவதற்கு அந்த வங்கிகளுடன் திறைசேரியின் பின்னிலிருந்து பின்னான கணக்குகளைத் திறப்பதன் மூலமும் இரண்டு வங்கிகளோடு கைக்கொள்ளப்பட்ட முறைமையானது தெரிவு செய்யப்பட்ட தனியார் வங்கிகளுக்கும் விஸ்தரிக்கப்படவும் முடியுமெனவும் குழு அவதானித்தது.

**பொதுவான சிபாரிசுகள்**

**நிதியமைச்சினை பின்வருவனவற்றுக்குப் பணித்தல்.**

1. எண்மமுறைக் கட்டமைப்பு அமைச்ச (Ministry of Digital Infrastructure), ICTA ஏனைய வேண்டப்படும் பிரதிநிதித்துவங்களின் பங்குபற்றுதலுடன் பின்வருவனவற்றை சாதித்துக்கொள்ளுவதற்கு ஒரு கால கட்டுப்பாடுடைய செயற்திட்டத்தை அமுல்படுத்துவதற்கு ஒரு அர்ப்பணிக்கப்பட்ட குழாமினை அமைத்து வழிநடாத்துதல்.

1.1 சுங்க பணிப்பாளர் நாயகம், உள்நாட்டு இறைவரி ஆணையாளர் நாயகம், மதுவரி ஆணையாளர் நாயகம் என்போருக்கு இந்த அறிக்கையில் கீழ் கொடுக்கப்பட்ட வழிகாட்டுதல்களை வழிநடத்தலும் அமுல்படுத்தலைக் கண்காணித்தலும்.

1.2 மோட்டார் போக்குவரத்து ஆணையாளர் நாயகம், கம்பனிகள் பதிவாளர், ஆட்பதிவாளர் மற்றும் பதிவாளர் நாயகம் என்போரால் நிகழ்ச்சித்திட்டங்களின் உரிய நேர அமுல்படுத்தலுக்காகவும், வருமான ஒழுங்குகளை தவிர்ப்பதற்காகவும், வரி அடிப்படையை விஸ்தரிப்பதற்காக தகவல்களைப் பகிருவதற்காகவும் உத்தேச ICT நிகழ்ச்சித்திட்டங்களை கண்காணித்து வழிநடாத்துதல்.

1.3 இறக்குமதி ஏற்றுமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம், இலங்கை நியமங்கள் நிறுவகம், சுகாதார போசாக்கு மற்றும் சுதேச மருத்துவ அமைச்சு (உணவுக் கட்டுப்பாட்டுக்காக) மிருக உற்பத்தி மற்றும் சுகாதாரத் திணைக்களம் (மிருகங்களின் நோய்த்தொற்று காப்புக்கானது) மற்றும் விவசாயத் திணைக்களம் (தாவரங்களின் நோய்த்தொற்று காப்புக்கானது) ஆகிய இறக்குமதி தடையொழிப்பு செயன்முறையில் சுங்கத்துடன் ஈடுபடும் பிரதான முகவராலயங்களுடன் ஒரு செயல்விளைவுடைய இடர் முகாமைத்துவ முறைமையூடாக சட்டரீதியான வர்த்தகத்தை வசதிப்படுத்தும் அதேவேளையில், உரிய இறக்குமதிக் கட்டுப்பாடுகளை உறுதிப்படுத்தும் முகமாக உத்தேச இடங்களிலுள்ள ICT முறைமைகளை கண்காணித்து வழிநடத்துதல் ஒன்றுடன் ஒன்று மேற்கவியும் விடயங்களைக் குறைத்துக் கொள்வதற்காகவும், ICT ஊடான செயன்முறையை இலகுபடுத்துவதற்காகவும், செயன்முறைகளின் மீள் பொறிமுறைப்படுத்தலானது ICT பிரயோகங்களை அமுல்படுத்துவதற்கு முன்பாக கவனிக்கப்படவேண்டும்.

1.4 மூன்று பிரதான வருமானம் ஈட்டும் திணைக்களங்களால் தற்பொழுது பயன்படுத்தப்படும் எல்லா மென்பொருள் நிகழ்ச்சித்திட்டங்கள் தொடர்பாகவும் ICTA முறைமை கணக்காய்வு மேற்கொள்ளப்படுதலும் ஆறு மாதத்திற்குள் கணக்காய்வாளர் நாயகத்திற்கு அறிவிக்கப்படுதலும்.

2. அரச வங்கிகளுடன் தற்போது செயற்படுத்தப்படும் E கொடுப்பனவு வசதிகளை சில தெரிவு செய்யப்பட்ட தனியார் வங்கிகளுக்கும் ஒத்த விதத்திலோ அல்லது இன்னும் சிறந்த விதத்திலோ வரி கொடுப்பவர்களை அவர்கள் வரிசெலுத்துவதில் வசதிப்படுத்தும் முகமாகவும் தொலைபேசி வங்கி 24x7 நாட்கள் போன்ற பிந்தி வந்த வங்கி அபிவிருத்திகளின் அமுல்படுத்தலை ஊக்குவிப்பதாலோ, E கொடுப்பனவு வசதிகளை விஸ்தரிப்பதற்கான சாத்தியங்களை ஆராய்தல்.

3. முன்னேற்றத்தை கண்காணிக்கும் முகமாக அரசாங்கக் கணக்குக் குழுவுக்கு காலாண்டு அடிப்படையில் முன்னேற்ற அறிக்கையைச் சமர்ப்பித்தல். முதலாவது அறிக்கையானது ஒவ்வொரு செயற்பாட்டுக்குமான காலக்கெடுவுடன் ஒரு விபரமான அமுல்படுத்தல் திட்டமானது முதலாம் அறிக்கையுடன் இணைக்கப்படவேண்டும்.

4. கணக்காய்வாளர் நாயகம் 2017 ஒக்ரோபர் 01 ஆம் திகதியளவில் (தேவையேற்படின் வரவுசெலவுத்திட்டத்திற்கு முன்) இந்த சிபாரிசுகளின் அமுல்படுத்தல் முன்னேற்றம் மீதான அறிக்கையை சமர்ப்பிக்கவேண்டும். தொழில்நுட்ப அறிவுடன் கூடிய உள்நாட்டு அல்லது வெளிநாட்டு நிபுணர்களின் உதவியைப் பெற்றுக்கொண்ட பின்னர் கணக்காய்வாளர் தலைமை அதிபதி இதைச் சமர்ப்பிக்க வேண்டும்.

1. இரான் விக்கிரமரத்ன (தவிசாளர்)
2. பந்துல குணவர்தன (உறுப்பினர்)
3. செய்யது அலிசாஹிர் மௌலானா (உறுப்பினர்)
4. டாக்டர். நலிந்த ஜயதிஸ்ஸ (உறுப்பினர்)
5. டாக்டர். கவிந்த ஹேஷான் ஜயவர்தன (உறுப்பினர்)

**பின்னிணைப்பு: ஆ .1**

**குழுவின் தீர்மானங்கள்**

**உள்நாட்டு இறைவரித் திணைக்களம்**

**தற்போதைய நிலை**

- இணையவழி கொடுக்கல் வாங்கல் வசதிகள் தற்பொழுது கிடைக்கக்கூடியதாக உள்ளது.
- எல்லா வகையான வரிகளையும் தன்னியக்கமாக்கல் இப்பொழுது நடைமுறையில் உள்ளது.
- ஒழுங்கீனங்களைத் தவிர்ப்பதற்காக முன்னரே அச்சடிக்கப்பட்ட வரிக்கொடுப்பனவுச் சிட்டைகள்.
- இனங்காணப்பட்ட 23 நிறுவனங்கள் இணைக்கப்படவேண்டும் அல்லது ஒன்று சேர்க்கப்படவேண்டும்.
- சுங்கத்திணைக்களம். இலங்கை வங்கி, மக்கள் வங்கி, மத்திய வங்கி, நிதியமைச்சு என்பவற்றை ஒன்றாக இணைக்கும் செயன்முறையில்

**தடைகள்**

- கம்பனிகள் பதிவாளர் திணைக்களத்துடன் வலையமைப்பு வசதி கிடைக்கப்பெறாத காரணத்தால் அத்திணைக்களத்துடன் ஒரு இடைமுகம் செய்வதற்கான ஒருங்கிணைப்பு செய்யமுடியாமை.
- சட்டத்தடைகளின் நிமித்தமாக தேவையான தகவல்களை வழங்குவதற்காக ஆட்பதிவாளர் திணைக்களம் இயலாதிருத்தல்.
- சட்டத்தடைகளின் நிமித்தமாகத் தேவையான தகவல்களை வழங்குவதற்கு மோட்டார் வாகனத் திணைக்களத்திற்கு இயலாதிருத்தல்.
- சில பிராந்திய அலுவலகங்கள் புதிய கணனிகளைக் கொண்டிருக்காத காரணத்தால் எல்லா பிராந்திய அலுவலகங்களுடனும் கட்டம் இரண்டை ஒன்றிணைக்க இயலாமலிருத்தல்.
- ஏனைய முகவராலயங்களிலிருந்து ஒத்துழைப்பு குறைவாக இருத்தல்.
- வரி செலுத்துபவர்கள் மற்றும் உள்ளக பணியாட்தொகுதியினருக்கான கருத்தரங்குகளை ஒழுங்கு செய்வதற்கு வளங்கள் இல்லாதிருத்தல்.
- மேலதிக மனிதவளத் தேவைப்பாடுகள்.

**பலங்கள்**

- 23 முகவராலயங்களும் ஒன்று சேர்க்கப்பட்டு அல்லது ஒன்றிணைக்கப்பட்டதைத் தொடர்ந்து வரி செலுத்துபவர்களுக்கான ஒரு தனித்துவமான இலக்கத்தை வழங்கக்கூடியதாக இருத்தல்.
- இணைப்பை பயன்படுத்தி ஒரு வரிக்கோப்பை வைத்திருக்கிறாரா இல்லையா என்பதை கண்டுபிடிக்கும் சாத்தியம்.
- முறைமைக் கணக்காய்வு.

**குழுவால் செய்யப்பட்ட ஆலோசனைகள்**

- கடனட்டைகள் ஊடாகக்கூட வரி செலுத்தும் வழிவகையை அறிமுகம் செய்தல்.
- RAMIS முறைமை மீதான ஒரு கணக்காய்விற்காக உரிய ஆவணங்களை கணக்காய்வாளர் தலைமை அதிபதிக்கு வழங்குவதுடன் இதன் நிமித்தமாக அது தொடர்பான அவரது கருத்துக்களை குழுவுக்கு முன்வைப்பதற்கு வசதிப்படுத்துதல்.
- முறைமையை பயனாளி சினேகமானதாகவும், வரி செலுத்துபவர்களுக்கு சுலபமானதாகவும் ஆக்குதல்.
- அமுல்படுத்தல் முறைமை தொடர்பாக அல்லது ஏதும் கொள்கை விடயங்கள் தொடர்பாக எழும் தடைகளை எழுத்துமூலம் குழுவுக்கு முன்வைத்தல்.
- வருமானங்களை சேகரித்தல், அவ்வாறு சேகரிக்கப்பட்ட நிதியங்களை BOC - ஏனைய வங்கிக்கு மாற்றுதல் தொடர்பாக BOC யுடனும் ஏனைய வங்கிகளுடனும் பேச்சுவார்த்தை செய்வதற்கான இயலுமையைத் தேடி ஆராய்தல்.
- IRD முறைமைக்கு பொதுமக்களை இலகுவாகச் சென்றடைதல் மற்றும் பாதுகாப்புகள் எதுவுமின்றி பதிவு செய்ய வசதிப்படுத்துதல், பதிவுச் செயன்முறையை சுலபமாக்குவதற்கு வசதிப்படுத்தல்.
- வங்கிகள், கடனட்டைகள், வாகனப்பதிவுகள் ஊடக பயன்பாடுகள் கொடுக்கல் வாங்கல்களை கண்காணிப்புச் செய்வதினால் வருமானத்தை அதிகரித்துக் கொள்ளும் சாத்தியங்களை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் தேடி ஆராய்தல்.
- ஆட்பதிவுத் திணைக்களமானது தனிப்பட்ட ஒழுங்குவிதிகள் தொடர்புடைய தரவுப் பகிர்தலின் சாத்தியமான விடயங்களை இனம்காணும் முகமாகவும், DRP யில் தங்கியிருக்கும் முக்கிய அரசாங்க நிறுவனங்களிடையே தற்போதைய மற்றும் எதிர்கால தகவல் பகிர்வு தேவைப்பாடுகளின் பிரகாரம் தேவையான திருத்தங்களைச்செய்து கொள்வதற்குமாக தற்போதைய ஆட்கள் பதிவு சட்டத்தை மீளாய்வு செய்யவேண்டும்.

**சுங்கத் திணைக்களம்**

**தற்போதைய நிலை**

- முக்கியமான ஏற்றுமதியாளர்களுக்கு இலத்திரனியல் முறைமையை சென்றடையச்செய்தல்.
- வாடிக்கையாளர்கள் சுங்கத் தீர்வை செலுத்துவதற்கு முழுமையான இலத்திரனியல் வசதி அளித்தல்.

**தடைகள்**

- தன்னியக்கப்படுத்தப்பட்ட முறைமையுடன் பண்ட வளாக பரீட்சிப்பு அலகுகள் இணைக்கப்படவில்லை. தொலைவில் அமைந்துள்ள பண்ட வளாகங்களுக்கு வலையமைப்பு இணைப்பு எதுவும் இல்லை.
- வெளிப்புற முகவராலயங்களுடன் தன்னியக்ககம் எதுவும் இல்லை. அதாவது வங்கிகள் கப்பல் முகவராலயங்கள் இன்னும் பலவற்றுடன் தன்னியக்கம் எதுவும் இல்லை.
- எண்மமுறை ஒப்பமிடப்பட்ட ஆவணங்கள்/பற்றுச்சீட்டுக்களை வழங்குவதற்கு அதிகாரம் இல்லாமை.

**குழுவின் ஆலோசனைகள்**

- தற்போதுள்ள கொடுப்பனவு முறைமை மீதான அரசாங்கக் கொள்கையை மாற்றுதலும், கடனட்டைகள் ஊடாக சுங்கவரிகளைக் கொடுப்பனவு செய்தல் போன்றவற்றை உள்ளடக்குதலும்.
- வான் சரக்கு முறைமையினை உடனடியாக அமுல்படுத்துதல்.
- இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல்களை பலப்படுத்தும் முகமாகவும், சட்டரீதியாக செல்லுபடியாகும் ஆவணங்களாக இலத்திரனியல் ரீதியாக ஆவணங்களைப் பரிமாற்றுவதற்கும் தேசிய சான்றுப்படுத்தல் அதிகாரசபையொன்றை நிறுவும் செயன்முறையை ICTA துரிதப்படுத்துவதற்கும் அதன்மூலம் சுங்கத் திணைக்களமானது எண்மமுறை கையெழுத்து ஆவவணங்கள், பற்றுச்சீட்டுகள் இன்னும் பலவற்றை விநியோகிப்பதற்கும் அனுமதியளிப்பதற்குமாகும். (2006 ஆம் ஆண்டு இலத்திரனியல் கொடுக்கல் வாங்கல் சட்டத்தைப் பார்க்குக)
- தேசிய மட்டக் கொடுப்பனவு இயங்கு தளத்தை ஒழுங்குபடுத்தல்.
- ஒரு வினைத்திறனான மனைப்பக்க வகைப்படுத்தல் முறைமையை அமுல்படுத்துதல் மற்றும் நடைமுறை வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான ஒரு பெறுமதி மதிப்பிடல் முறைமை.
- MIS முகாமைத்துவ முறைமை மீதான முக்கியத்துவம்
- தன்னியக்கப்படுத்துதல் முறைமையையும், இடர்முகாமைத்துவ முறைமையையும் ஒரே நேரத்தில் விருத்திசெய்தல்.

## மதுவரித் திணைக்களம்

### தற்போதைய நிலை

- உள்ளூர் ரீதியில் உற்பத்தி செய்யப்படும் மதுபானத்தின் நாளாந்த அடிப்படையிலான தரவுகளை மென்பாகத்தினூடாக தலைமை அலுவலகத்திற்குப் பரிமாறிக்கொள்வதற்கான ஆற்றல்.

### எதிர்கால அபிவிருத்திகள்

- மதுபான அனுமதிப்பத்திரத்திலிருந்து வருமானத்தைப் பெற்றுக்கொள்வதற்கான EOI ஆவணம் தொடர்பான மென்பாகத்தை அபிவிருத்தி செய்தல்.
- மதுபான அனுமதிப்பத்திரத்தை விநியோகிப்பதற்கான E-சேவை வசதிகளை நடைமுறைப்படுத்துதல்.
- மூலப்பொருளிலிருந்து முடிவுப்பொருள் வரையான கண்ணோட்டத்தில் உற்பத்திக் கண்காணிப்பு முறைமையை செயற்படுத்துதல்.
- உண்மையான மதுபான உற்பத்திகளை இனங்காண்பதை இலகுபடுத்துவதற்கும் மற்றும் வருமானத்தை ஈட்டுவதற்கும் மதுபான போத்தல்களில் ஒட்டக்கூடிய ஒரு விஷேட ஸ்டிக்கரை அறிமுகப்படுத்துதல்.
- ஆரம்பத்திலிருந்து முடிவு வரையான நடபடிமுறையை அனுகூலப்படுத்துவதற்கும் மற்றும் முகாமைத்துவத்தின் ஒரு கருவிசாதனமாக பெறுமதி சேராத சிறப்புப்பணிகளை தானியக்கப்படுத்துவதற்கும் தொழில்முயற்சிகளினுள்ளும் தொழில்முயற்சிகளுக்கு இடையிலம் பணியொழுக்குகளை மீளத்திட்டமிட்டுப் பகுப்பாய்வு செய்யும் பொருட்டு வியாபார நடபடிமுறை மீள்பொறியியலாக்கல் முறைமையைப் (BPRS) பயன்படுத்துதல்.

### குழுவின் விதந்துரைப்புகள்

- எதனோல் இறக்குமதிகளைக் கண்காணிக்கும் பொருட்டு சுங்கத் திணைக்களத்துடன் வலிமையான ஒரு தொடர்பைப் பேணுதல்.
- ஏற்றுமதி மற்றும் இறக்குமதி ஆகியவற்றுடன் தொடர்புடைய ஒவ்வொரு நிறுவனமும் தமக்கென்ற இடர் முகாமைத்துவ முறைமையைப் பேணுதல்.
- செலவு அதிகமாகவிருந்தாலும் கணக்காய்வாளர் அதிபதியினூடாக தானியக்க முறைமை பற்றிய ஒரு கணக்காய்வை மேற்கொள்ளச்செய்தல்.
- முறைமையை பேணிப் பராமரிப்பதற்கு பொறுப்புடைய ஒரு நபரை நியமித்தல்.

தமது வருமான சேகரிப்பு சார்ந்த செயற்பாடுகளை மேம்படுத்தும் நடபடிமுறையில் தேவையான அல்லது அதற்கு உதவியாக அமையக்கூடிய ஒரு சில ஏனைய நிறுவனங்களுடன் ஒன்றிணைந்து ஒரே நேரத்தில் முக்கியமான வருமானம் ஈட்டும் நிறுவனமொன்றை உருவாக்குகின்ற ஒன்றுடனொன்று தொடர்புடைய ஒரு சிலஅமர்வுகளை நடத்துவதற்கு இக்கட்டத்தில் குழு தீர்மானித்தது. அதற்கிணங்க குழுவின் முன்னிலையில் அழைக்கப்பட்ட பின்வரும் நிறுவனங்கள் பின்வரும் பிரிவுகளில் கவனம்செலுத்தி விசாரிக்கப்பட்டன.

- கணக்காய்வு முகாமைத்துவ முறையினதும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறையினதும் தற்போதைய நிலைமை.

- கணக்காய்வு முகாமைத்துவ முறைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறைகள் ஆகியவற்றின் கீழ் எதிர்நோக்கும் பிரச்சினைகள் மற்றும் தடைகள்.
- தற்போதுள்ள கணக்காய்வு முகாமைத்துவ முறைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறைகள் ஆகியவற்றின் பலம் மற்றும் பலவீனங்கள்.
- எதிர்கால அபிவிருத்திகளுக்கான திட்டங்கள்.
- வெளி நிறுவனங்களுடன் இணைப்பு ஏற்படுத்துவதில் கணக்காய்வு முகாமைத்துவ முறைகள் மற்றும் தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறைகள் ஆகியவற்றின் கீழ்காணப்படும்பிரச்சினைகள்.
- வருமானக்கணக்கிணக்கம்

**கம்பனிப் பதிவாளர் திணைக்களம்**

**பின்வரும் விடயங்கள் கலந்துரையாடப்பட்டன/ வெளிப்படுத்தப்பட்டன.**

- திணைக்களத்தின் முழுமையான முறைமையையும் கணனிமயப்படுத்துவற்கான பெறுகைச் செயன்முறை ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் விரைவில் ஒப்பந்தம் கையளிக்கப்படும்.
- முறைமையை அபிவிருத்தி செய்வதற்காக 06 மாத காலம் வழங்கப்படும் (31/01/2017 அல்லது அதற்கு முன்னர் நிறைவு செய்யப்படவுள்ளது).
- 30/04/2017 அளவில் முழு செயன்முறையும் நிறைவு செய்யப்படும்.
- 01/02/2017 இற்குப் பின்னர், புதிய கம்பனியொன்றிற்கான பதிவுச் செயன்முறை 24 மணித்தியாலங்களுக்குள் சாத்தியமாகும்.
- புதிய பதிவிற்காக வரி செலுத்துவோரின் விபரங்கள் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்திற்கு வழங்கப்பட முடியும்.
- உள்நாட்டு இறைவரித் திணைக்களம் மற்றும் ஏனைய தெரிவுசெய்யப்பட்ட நிறுவனங்களுக்கிடையிலான தொடர் சாத்தியமாகும்.

நிறுவனரீதியான தேவைகளைப் பரிமாறிக் கொள்வதுடன் அதற்கிணங்க இரு முறைமைகளினதும் தொடர்பை விரிவுபடுத்துமாறும் உள்நாட்டு இறைவரித் திணைக்களத்தின் சிரேஷ்ட ஆணையாளர் மற்றும் கம்பனிகள் பதிவாளர் ஆகியோரைக் குழு பணித்தது.

**ஆட்களைப் பதிவுசெய்யும் திணைக்களம்**

- இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைக் கருத்திட்டம் 2011 ஆம் ஆண்டில் ஆரம்பிக்கப்பட்டபோதும், சட்டத் தடைகள் காரணமாக அது தற்காலிகமாக இடைநிறுத்தப்பட்டது.
- சம்பந்தப்பட்ட சட்டத்துக்கான திருத்தங்கள் 21 ஜூன் 2016 அன்று நிறைவேற்றப்பட்டதுடன் ஆகஸ்ட் 2016இல் கருத்திட்டம் மீள ஆரம்பிக்கப்படவுள்ளது. 332 பிரதேச செயலாளர் பிரிவுகளும் திணைக்களத்தின் தன்னியக்க முறைமையுடன் இணைக்கப்படவுள்ளன.
- தற்போதுள்ள சட்டச் சட்டகத்தினுள், வெளியக முகவராண்மைகளுக்கிடையேயான தரவுப்பகிர்வு புரிந்துணர்வு ஒப்பந்தங்களின் ஏற்பாடுகளுடன் சட்டபூர்வமானதாகும்.
- முறைமைக்கானஅபிவிருத்தி நடவடிக்கைகள் நிறைவடைந்த பின்னர், இரண்டு வாரங்கள் என்னும் கால வரையறையொன்றினுள் புதிய அடையாள அட்டையை வழங்க முடியும்.
- 09 மாதங்களுக்குள், இலத்திரனியல் அடையாள அட்டையொன்றின் மூலம்பழைய அடையாள அட்டை மாற்றீடு செய்யப்படலாம்.
- இடைக்காலத் தீர்வொன்றாக, நிலைமாறு காலப்பகுதியின்போது புதிய அடையாள அட்டைகள் விண்ணப்பதாரருக்கு வழங்கப்படும்.
- 2017ஆம் ஆண்டில், க.பொ.த. (சா/த) விண்ணப்பதாரர்களுக்கு புதிய இலத்திரனியல் தேசிய அடையாள அட்டைகள் வழங்கப்படும்.
- மென்பொருள் அபிவிருத்தி மூலதாரக் குறியீடுகளுக்கான உரிமைகளை திணைக்களம் கொண்டிருப்பதால், முறைமைக்கான அபிவிருத்திகள் மற்றும் இற்றைப்படுத்தல்கள் ஆகியன எந்தவொரு தொழில்நுட்ப முகவராண்மையினதும் உதவியுடன் திணைக்களத்தினாலேயே மேற்கொள்ளப்பட முடியும்.
- தற்போது, ஆளொரொருவரின் தனிப்பட்ட அடையாளத்தை உள்நாட்டு இறைவரித் திணைக்களம் உறுதிப்படுத்த முடியும். RAMIS முறைமையின்அமுலாக்கத்துடன், பொதுவான தரவுகளும் பகிரப்பட முடியும்.

டிஜிட்டல் கொடுக்கல் வாங்கல் அட்டை மற்றும் இலத்திரனியல் தேசிய அடையாள அட்டை ஆகியவற்றை 2017 ஜூன் 30இற்கு முன்னர் ஒரே அட்டையாக இணைப்பதற்கான ஆயத்தங்களை மேற்கொள்ளுமாறு கௌரவ பிரதம அமைச்சர் பணிப்புரைகளை வழங்கியுள்ளாரென CEO, முகாமைத்துவப் பணிப்பாளர், ICTA கூறினார்.

அக்குறிக்கோளை அடைவதற்கு, ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களம் தற்போது போதிய சட்ட ஏற்பாடுகளைக் கொண்டிருக்கவில்லையெனவும் தற்போதுள்ள சம்பந்தப்பட்ட நிறுவனங்களின்சட்டங்கள் அதற்கிணங்க திருத்தப்பட வேண்டுமெனவும் ஆணையாளர் தலைமையதிபதி குறிப்பிட்டார்.

சட்ட நடவடிக்கைமுறை நீண்டதாகவும் சிக்கலானதாகவும் காணப்படுவதால், 2017 ஜூன் 30இற்கு முன்னர் அட்டை வழங்கும் செயற்பாடுகளைத் தொடங்குவதன் நடைமுறைத்தன்மை பற்றி தவிசாளர் விசாரித்தார்.

இவ்விடயத்தை சட்டத்துறைத் தலைமையதிபதிக்கு ஆற்றுப்படுத்தி இது தொடர்பில் அவரது அவதானிப்புகளைப் பெற்றுக்கொள்ளுமாறு ஆட்பதிவு ஆணையாளர்

தலைமையதிபதி மற்றும் CEO, முகாமைத்துவப் பணிப்பாளர், ICTA ஆகியோரைக் குழு பணித்தது.

ஆட்களைப் பதிவு செய்யும் திணைக்களத்தால் சேகரிக்கப்படும் தனிப்பட்ட தரவுகள் ஏனைய நிறுவனங்களுக்கிடையே பகிரப்படும்போது ஆளின் அந்தரங்கத்தன்மை முழுமையாகப் பாதுகாக்கப்பட வேண்டும் என்னும் அபிப்பிராயத்தைக் குழு கொண்டிருந்ததுடன் இவ்விடயத்தைத் தீவிரமாகப் பரிசீலிக்குமாறு CEO, முகாமைத்துவப் பணிப்பாளர், ICTAவைப் பணித்தது.

இவ்வகைத் தரவுகள், நீதிமன்ற ஆணையொன்றின் பேரிலோ அல்லது சம்பந்தப்பட்ட நபரின் இணக்கத்துடனோ மாத்திரமே பகிரப்பட முடியுமென ஆட்பதிவு ஆணையாளர் தலைமையதிபதி தெரிவித்தார். பிரசைகள் தரவு முகாமைத்துவக் குழுவொன்று நிறுவப்பட்டுள்ளதெனவும் அது முறை சார்ந்ததாக்கப்படவேண்டியுள்ளதுடன் குறிப்பிட்ட சட்டத்தின் ஏற்பாடுகளாகக் கொண்டுவரப்பட வேண்டுமெனவும் CEO, முகாமைத்துவப் பணிப்பாளர், ICTA தெரிவித்தார்.

முறைமைக் கணக்காய்வொன்றை நடத்துமாறும் கணக்காய்வாளர் தலைமையதிபதியைக் குழு பணித்தது.

**பதிவாளர் நாயகம் திணைக்களம்**

பதிவாளர் நாயகம் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப முறையின் தற்போதைய நிலைமைபற்றி பதிவாளர் நாயகம் விளக்கியதுடன் பின்வருவன பற்றி குழுவிற்கு அறிவூட்டினார்.

- ஒரு புதிய மென்பொருள் கொழும்பு தலைமை அலுவலகத்தில் பரீட்சிக்கப்பட்டு வருகின்றது.
- பிறப்புகள், திருமணம் மற்றும் இறப்புகள் ஆகியவற்றின் இலத்திரனியல் பதிவு ஆரம்பிக்கப்பட்டுள்ளது.
- காணிகளின் இலத்திரனியல் பதிவு அண்மையில் ஆரம்பிக்கப்பட்டுள்ளதுடன் 05 காணிப்பதிவு அலுவலகங்கள் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன (அண்ணளவாக 6%)
- இவ்வருடத்திற்குள் 22 காணிப்பதிவு அலுவலகங்களை சேர்த்துக் கொள்வது இலக்காகக் கொள்ளப்பட்டுள்ளது.
- 2ஆம் கட்டத்தில், தற்போதுள்ள உரித்துக்கள் ஸ்கேன்(scan) செய்யப்பட்டு தரவுத்தளத்திற்கு சேர்த்துக்கொள்ளப்படவுள்ளதுடன் புதிய உரித்துகளின் இலத்திரனியல் பதிவு ஆரம்பிக்கப்படும்.
- பாதுகாப்பு நடவடிக்கையொன்றாக, ஸ்கான் (scan) செய்யப்பட்ட படங்கள் முறைமையிலுள்ள 3 வித்தியாசமான அமைவிடங்களில் 3 வித்தியாசமான சேவையகங்களில் (Server)சேமிக்கப்படவுள்ளன. இதனால் உரித்துகள் 100% பாதுகாப்பாக இருப்பதுடன் தவறான இடத்தில் வைக்கப்படுவதற்கான வாய்ப்புகள் இல்லை.
- உரித்துகள் பதிவின்போது பொதுமக்களால் செலுத்தப்படும் முத்திரைக் கட்டணம் குறித்த இணைப்பு மற்றும் ஆதனப்பதிவிற்காக வழங்கப்பட்ட ஆவணங்களின் விபரங்கள் பற்றிய இணைப்பு ஆகிய இரண்டு இணைப்புகளை உள்நாட்டு இறைவரித் திணைக்களத்துடன் முறைமை கொண்டுள்ளது.

அண்மையில் ஏற்பட்ட வெள்ள நிலைமையின்போது இயற்கைக் காரணங்களாலும் ஆட்களின் குற்றச்செயல்களாலும் உரித்துக்களுக்கு ஏற்படுத்தப்பட்ட சேதங்கள் பற்றி குழு விசாரித்தது. காணிப்பதிவு அலுவலகங்களில் CCTV கமராக்களைப் பொருத்துவதன் மூலம் இந்நிலைமை தவிர்க்கப்படலாமென பதிவாளர் நாயகம் தெரிவித்தார்.

கணக்காய்வு சுவடொன்றை நடத்தி முதலீட்டின் உற்பத்தித்திறனை பரிசோதிக்குமாறும் முறைமையின் பொதுக் கட்டுப்பாடுகள் மற்றும் பிரயோகக் கட்டுப்பாடுகள் பற்றி ஆராயுமாறும் கணக்காய்வாளர் தலைமையதிபதியைக் குழு பணித்தது.

**கொழும்பு மாநகரசபை**

கொழும்பு மாநகரசபையில் தற்போது காணப்படும் தகவல் தொழில்நுட்ப முறைமையின் தற்போதைய நிலைமை பற்றி கொழும்பு மாநகரசபை ஆணையாளர் விளக்கினார்.

- அனைத்து உள்ளக நடவடிக்கைளும் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.
- வரிப்பிரிவு, வரி சேகரிப்பு செயன்முறை, திட்டமிடல் பிரிவு ஆகியவை 06 மாதங்களுக்குள் கணனிமயப்படுத்தப்படவுள்ளன.
- சரிபார்த்தற் பட்டியல் நிறைவுசெய்யப்படின், கட்டடத் திட்டங்களை 02 நாட்களுக்குள் அங்கீகரிக்கமுடியும்.
- வரி இணைய வழியாக (on line) செலுத்தப்படலாம். கடனட்டைக் கொடுப்பனவுகள் ஏற்றுக் கொள்ளப்படுகின்றன. ஆயினும், 2% தரகுக் கட்டணங்கள் காரணமாக இணையவழிக் கொடுப்பனவுகள் பிரபலமடையவில்லை.
- இருப்பு அட்டை முறைமையொன்றின் (bin card system) மூலம்களஞ்சியங்கள் தனித்தனியாகக் கண்காணிக்கப்படுகின்றன.
- தற்போதுவரை 150,000 ஆதனங்களின் விபரங்கள் கணனிமயப்படுத்தப்பட்டுள்ளன.
- கொழும்பு மாநகரசபையின் மொத்த வருமானத்தின் ¼ பங்கு வீதவரி மதிப்பீட்டின் மூலமாகப் பெற்றுக்கொள்ளப்படுகின்றது (ரூ. 12 பில்லியன்)
- தற்போது காணப்படும் மதிப்பீட்டு பெறுமதியிடல் முறைமை பல ஒழுங்கீனங்களுக்கு இட்டுச்செல்லக்கூடியதென்பதால், மோசடி நிலைமைகள் இடம்பெறுவதற்கான சாத்தியங்கள் காணப்படுகின்றது.
- அங்கீகரிக்கப்படாத நிர்மாண நிறுவனங்களிடமிருந்து வரி சேகரிப்பதற்கான பொறிமுறை இல்லை.
- ஒழுங்கீனங்களைத் தவிர்ப்பதற்காக முறைமையினுள்ளேயே மதிப்பீட்டு முன்னறிவித்தல் உருவாக்கப்பட வேண்டும்
- மதிப்பீட்டுத் திணைக்களத்தினூடாக மதிப்பீடு மேற்கொள்ளப்பட வேண்டும்.

ஏனைய நாடுகளால் பின்பற்றப்பட்டு வரும் வரி விதிப்பு மற்றும் வருமானம் சேகரிப்பு பற்றிய சிறந்த நடைமுறைகள் பற்றி குழு விசாரித்ததுடன் அத்தகைய முறைமைகளையும் பரிசீலிக்குமாறு ஆணையாளரைப் பணித்தது.

சொத்து மதிப்பீடுகள் பற்றிஎழுமாற்றுக் கணக்காய்வொன்றை மேற்கொண்டு ஒரு மாதத்திற்குள் குழுவிற்கு அறிக்கையிடுமாறு கணக்காய்வாளர் தலைமையதிபதியை குழு பணித்தது.

**ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டுத் திணைக்களம்**

- இருபத்தெட்டு அமைப்புகளின் கூட்டிணைவுடன் இணையவழி உரிமங்கள் வழங்குவதற்கான பூர்வாங்க ஆயத்தங்கள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.
- ஆரம்பத்தில், முறைமையை முன்னெடுப்பதற்காக ஐந்து நிறுவனங்கள் அடையாளம் காணப்பட்டுள்ளன. அவை NMR, TRC, CEA, பீடைகொல்லிகள் திணைக்களம் மற்றும் மதுவரித் திணைக்களம்.
- ஒக்டோபர் 01ஆம் திகதியளவில், இந்நிறுவனங்களிடமிருந்து இணையவழியாக பரிந்துரைக் கடிதங்களைப் பெற்றுக்கொள்ளத் திட்டமிடப்பட்டுள்ளது.
- 2017ஆம் ஆண்டின் முதலாம் காலாண்டில் இணையவழியாக விண்ணப்பப் படிவங்களை வழங்குவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- மொறட்டுவ பல்கலைக்கழகத்திடமிருந்துகூறுவிலைகள் கோரப்பட்டுள்ளதுடன் இந்த நோக்கத்திற்காக ஆலோசகரொருவர் நியமிக்கப்பட்டுள்ளார்.

தவிசாளரால் விசாரணை செய்யப்பட்டபோது, தரவூட்டம் மற்றும் சரிபார்த்தல் ஆகியவற்றிற்காக எடுத்துக்கொள்ளப்படும் நேரம் குறைக்கப்படுவதால், பரிந்துரைக் கடிதங்கள் தயாரெனின்,இணையவழி முறைமையை நடைமுறைப்படுத்திய பின்னர் அரை மணித்தியாலத்திற்குள் உரிமங்கள் வழங்கப்படலாமென கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி விளக்கினார். தமது விண்ணப்பங்களின் செயல்படுத்துகையின் நிலைமை பற்றியும் குறைபாடுகள் எதுவும் காணப்படுமாயின் அவை பற்றியும் இற்றைப்படுத்தலொன்றை வாடிக்கையாளரும் பெற்றுக்கொள்ளலாம்.

திணைக்களத்திற்கு வருகை தராது உரிமம் பெற்றுக்கொள்வதை வாடிக்கையாளருக்கு இயலச்செய்வதை மேம்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றதென கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி மேலும் தெரிவித்தார்.

சரக்கின் பெறுமதியின் மீது கட்டணம் அறவிடப்படுவதால் திணைக்களத்தால் அறவிடப்படும் கொடுப்பனவு உரிமக் கட்டணமொன்றாகவா அல்லது வரியொன்றாகவா இருக்கவேண்டுமென குழு விசாரித்தது. இவ்விடயத்தை நிதியமைச்சிற்கு கொண்டுசெல்லுமாறு திணைக்களத்தின் உத்தியோகத்தர்களைக் குழு பணித்தது.

ஏற்றுமதி, இறக்குமதி கட்டுப்பாட்டாளர் திணைக்களம் மற்றும் இலங்கைச் சுங்கம் ஆகியன இணைந்த செயன்முறைகள் மூலம் பணியாற்றி வருவதால் செயன்முறை மேம்பாடுகள் அல்லது மீளக் கட்டமைத்தல் பற்றிய கற்கை நடத்தப்பட்டால் வினைத்திறனை மேம்படுத்துவதற்கான சாத்தியமொன்று காணப்படுவதாக ICTA இன்நிகழ்ச்சிப் பணிப்பாளர் விளக்கினார்.

உள்ளக மற்றும் முறைமைக் கணக்காய்வுகளை நடத்துவதற்கான வசதிகள் திணைக்களத்தில் காணப்படுகின்றனவா எனப் பிரதிக் கணக்காய்வாளர் தலைமையதிபதி விசாரித்தார். முறைமைப் பகுப்பாய்வாளரொருவரையும் உள்ளகக் கணக்காய்வாளரொருவரையும் ஆட்சேர்ப்புச் செய்வதற்காக பல வேண்டுகோள்கள் பொது நிருவாக அமைச்சிற்கு முன்வைக்கப்பட்டபோதும், இவ்வலுவலர்களின் சேவைகள் திணைக்களத்திற்கு வழங்கப்படவில்லையென கட்டுப்பாட்டாளர் தலைமையதிபதி தெரிவித்தார். வருமானக் கணக்காய்வுகள் தினமும் நடத்தப்படுவதாகவும் முறைமைக் கணக்காய்வொன்று தேவைப்படுத்தப்படின் வசதிகளை வழங்க முடியுமெனவும் அவர் மேலும் தெரிவித்தார்.

**கமத்தொழில் திணைக்களம்**

கமத்தொழிலில் தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தைப் பயன்படுத்துவதற்காக கொள்கையொன்று அறிமுகம் செய்யப்பட்ட இலத்திரனியல் கமத்தொழில் மூலோபாய வழிகாட்டியை (e-Agriculture Strategic Guide) திணைக்களம் உருவாக்கி முடித்துள்ளது.

ஆயினும், மீளக்கட்டமைத்தல் செயன்முறை தேசிய தொற்றுநோய்த் தடுப்பு சேவைக்கு இன்னமும் அறிமுகப்படுத்தப்படவில்லை. கைத்தொலைபேசிப் பிரயோகங்கள் மற்றும் இணையத்தளங்களின் மூலம் விவசாயிகளுக்கு தகவல் வழங்கும் செயன்முறை தற்போது மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திப்பொருட்களுக்கான இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு எவ்வித கொடுப்பனவுகளும் அறவிடப்படுவதில்லை. ஏற்றுமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதற்கு கொடுப்பனவொன்று அறவிடப்படுகின்றது. இச்செயன்முறைகள் இயந்திரங்கள் எதுவும் பயன்படுத்தாமல் மேற்கொள்ளப்படுகின்றன.

WTO இன்கீழ் இலத்திரனியல் முறைமையின் மூலம் ஏற்றுமதிப் பொருட்களுக்கு சான்றிதழ் வழங்குவதை செயற்படுத்துவதற்காக16 நாடுகளுள் ஒன்றாக இலங்கை தெரிவுசெய்யப்பட்டுள்ளது. கமத்தொழில் திணைக்களத்தின் தகவல் தொழில்நுட்ப திணைக்களத்தின் உதவியுடன் இறக்குமதி அனுமதிப்பத்திரங்கள் வழங்குவதில் தகவல் தொழில்நுட்ப முறைமையை அறிமுகம் செய்வதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன.

ASYCUDA முறைமையின் கீழ், ஒரே கூரையின் கீழான கருத்திட்டமொன்றாக குறிப்பிட்ட சில நிறுவனங்களுக்கு இலங்கைச் சுங்கத்துக்கான இணைப்பு வழங்கப்பட்டுள்ளதென பிரதி சுங்கப் பரிசோதகர் விசாரணையின் போது தெரிவித்தார்.**தாவர நோய்த்தடுப்பு சேவை**யும் முன்னோடிக் கருத்திட்டத்தில் உள்ளடக்கப்பட்டுள்ளது.

- இச்செயன்முறையில், இலத்திரனியல் முறை மூலம் தொற்றுநோய்த்தடுப்பு அலுவலர் அங்கீகாரத்தை இலங்கைச் சுங்கத்திற்கு அனுப்ப முடியும்.
- அவசியமான அனைத்துத் தகவல்களும் வழங்கப்பட்டால், ஆட்சேபனை இல்லையென்பதுடன், இம்முறைமையின் கீழ் பௌதீக பரிசோதனையின்றி சரக்கு விடுவிக்கப்படலாம்.

**பிரதான தொற்றுநோய்த்தடுப்பு அலுவலர்** பின்வருவனவற்றைத் தெரிவித்தார்.

- விலங்கு உற்பத்தி ஏற்றுமதிகளுக்கு சர்வதேச சுகாதார சான்றிதழொன்று வழங்கப்படுகின்றது.இறக்குமதியாளர் இணையவழியாக (online)அனுமதிக்காக விண்ணப்பிக்கலாம். ஆனால் பொருள் இறக்குமதி செய்யப்படும்போது மூல ஆவணங்கள் சமர்ப்பிக்கப்பட வேண்டும். இரண்டு விடயங்கள் ஏற்கனவே ASYCUDA முறைமையில் சேர்த்துக்கொள்ளப்பட்டுள்ளன.
- சோதனை மேற்கொள்ளப்படும் வரையில் சரக்கை விடுவிப்பதற்காகஇரண்டு வார காலப்பகுதி செலவிடப்படுகின்றது.
- புதிய பிரதேசங்களுக்குள் புதிய பீடைகள் அறிமுகம் செய்யப்படுதல் மற்றும் பரவுதல் ஆகியவற்றை தடுப்பதற்காக மேற்கொள்ளப்படும் சட்டவாக்க நடவடிக்கைமுறை தாவரத் தொற்றுநோய்த்தடையாகும்.
- இலங்கையிலுள்ள தாவரங்களுக்கும் தாவரங்களின் நன்னிலைக்கும் தீங்கு விளைவிக்கின்ற அல்லது ஊறு விளைவிக்கின்ற அல்லது அவற்றை அழிக்கின்ற நுண்ணங்கியை இலங்கைக்குள் கொண்டுவருவதற்கும் அவற்றைப்

பரப்புவதற்கும் எதிரான ஏற்பாடுகளை மேற்கொள்வதற்கான பாராளுமன்றச் சட்டமொன்றான, 1999 ஒக்டோபர் 7ஆம் திகதி சான்றுரை வழங்கப்பட்ட 1999 ஆம் ஆண்டின் 35 ஆம் இலக்க தாவரப் பாதுகாப்புச் சட்டத்தினால் தாவரத் தொற்றுநோய்த்தடுப்பு நடவடிக்கைகளின் சட்டப் பின்னணி பிரதானமாக ஆளுகை

- தாவ பாதுகாப்புச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளானவை (இலங்கை ஜனநாயக சோசலிசக் குடியரவு அரசாங்கத்தின் வர்த்தமானி இலக்கம் 165/2, திங்கட்கிழமை 1981 நவம்பர் 02) அயல்நாட்டுப் பீடைகளின் அறிமுகத்தைத் தடுக்கவும் எமது கமத்தொழிலில் விவசாயம் சார்ந்த கைத்தொழில்கள் மற்றும் நாட்டின் உயிர் பல்வகைத்தன்மை ஆகியவற்றைப் பாதுகாக்கவும்மென சில தாவரங்கள் மற்றும் தாவர உற்பத்திப் பொருட்கள் ஆகியவற்றின் இறக்குமதிக்கு தடையை அல்லது வரையறையை விதிக்கின்றன.
- உ-ம்: எமது இறப்பர் தோட்டப் பயிர்ச்செய்கையை தென் அமெரிக்கா இலங்கைக்கருகில் நோயிலிருந்து பாதுகாப்பதற்காக (இலங்கையில் இந்நோய் தற்சமயம் காணப்படவில்லை என்பதுடன் இது இறப்பர் தோட்டப் பயிர்ச் செய்கைக்கு அழிவை ஏற்படுத்தும் நோயாக இனங்காணப்பட்டுள்ளது) வளர்ச்சியையும் சாத்தியமுள்ள அல்லது அமெரிக்க வெப்பமண்டலத்தில் இனப்பெருக்கமடையும் மற்றும் தோற்றம் பெறும் அல்லது தென் அமெரிக்கா இலைகருகல் நோய் காணப்படும் நாடொன்றிலிருந்து ஏதேனும் இறக்குமதி தடைசெய்யப்பட்டுள்ளது.
- அந்நியநாட்டுப் பீடைகளின் அறிமுகம் எமது கமத்தொழிலை சீரழிப்பது மட்டுமன்றி ஏனைய நாடுகளுக்கான கமத்தொழில் உற்பத்திப் பொருள் ஏற்றுமதியையும் பாதிக்கின்றது.
- இலங்கை தற்சமயம் ‘கெடுங்டங்’ பீடை மற்றும் தென்னைப் பயிர்ச் செய்கையைத் தாக்கும் பீடையான ‘பால்ம் லெதெல் யெலவிங்’ போன்ற பீடைகளிலிருந்து விடுபட்டுள்ளது. தும்பு உற்பத்திப் பொருட்களை ஏற்றுமதி செய்யும் நாடுகள் மேற்படி பீடைகளிலிருந்து விடுதலை அடைந்திருக்க வேண்டும் என்பதே தும்பு உற்பத்திகளை உற்பத்தி செய்யும் நாடுகளின் வேண்டுகோளாக அமைந்துள்ளது. தற்சமயம் நாம் அந்தப் பீடைகளிலிருந்து விடுதலை அடைந்திருப்பதால் நாம் அந்த வேண்டுகோள்களை நிறைவேற்றும் நிலையிலுள்ளோம். இருப்பினும் இப்பீடைகள் காணப்படும் நாடுகளிலிருந்து அனுப்பப்படும் உற்பத்திகளின் மூலம் இப்பீடைகள் அறிமுகப்படுத்தப்படுமாயின், நாட்டின் தென்னை ஏற்றுமதிக் கைத்தொழில் துறையில் நேரடியான தாக்கத்தை ஏற்படுத்தும்.
- மேலும் வேரூண்டும் தாவரங்களில் நோய்த்தொற்றை ஏற்படுத்தும் சில நூற்புழுக்கள் காணப்படுகின்ற போதும் அவை இலங்கையில் இன்னும் தென்படவில்லை என்பதுடன் ஜப்பான், கொரியா மற்றும் ஐரோப்பிய ஒன்றிய நாடுகள் போன்றவை இப்பீடைகளிலிருந்து விடுதலை பெற்றிருக்க வேண்டுமென கோரிக்கை விடுப்பதால் அவை இலங்கை மண்ணிலும் அறிமுகமானால் எமது ஏற்றுமதியாளர்களால் அந்தக் குறித்த நாடுகளுக்கு தாவரங்களை அனுப்புவதற்கு இயலாத நிலை ஏற்படும்.
- மற்றொரு வகையில் இலங்கையானது தாவரம் மற்றும் தாவரஉற்பத்திப் பொருட்களுக்கு தீங்குவிளைவிக்கும் பீடைகளிலிருந்து பாதுகாக்கும் சர்வதேச ஒத்துழைப்பான சர்வதேச தாவரப் பாதுகாப்புப் பேரவையில் உறுப்பினராகவுள்ளது. மேலும் சுற்றாடல் மற்றும் உயிர் பல்வகைத்தன்மையை

பாதுகாக்கும் மொன்ட்ரியல் ஒழுங்குமரபு வரையறையில் இலங்கை கையெழுத்திட்டுள்ளது.

- தாவரம் மற்றும் தாவர உற்பத்திப் பொருட்கள் இறக்குமதியும் 2009 ஆம் ஆண்டின் 65 ஆம் இலக்கக் காடுகள் சட்டம், காடுகள் பாதுகாப்புக் கட்டளைச் சட்டம், தாவர விலங்குகள் பாதுகாப்புச் சட்டம் மற்றும் இலங்கை உயிர் பல்வகைத்தன்மை உடன்படிக்கை ஆகியவற்றில் வரையறை செய்யப்பட்டுள்ளது.

**மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களம்**

- மோட்டார் வாகனங்களைப் பதிவு செய்தல், வாகனங்களை சட்டபூர்வமா உரிமை மாற்றிக் கொடுத்தல் மற்றும் சாரதி அனுமதி அட்டைகள் விநியோகம் முதலிய கருமங்கள் தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப முறைமையினூடாக மேற்கொள்ளப்படுகின்றன.
- நெருங்கிய எதிர்காலத்தில் 17 மாவட்டங்களுக்கு வலையமைப்பு வசதிகள் வழங்கப்படும்.
- இந்த ஆண்டு e-Motoring (இ-மோட்டரிங்) கருத்திட்டம் அறிமுகப்படுத்தப்பட்டுள்ளது.
- அலுவலகங்களுக்கு சமூகமளிக்காமல் சேவைகளைப் பெற்றுக் கொள்ளல், குறிப்பாக வாகனங்களை இறக்குமதி செய்யும் போது திணைக்களத்தின் தரவுக் களஞ்சியத்திற்கு இன்டர்நெட்டின் மூலம் பிரவேசித்தல் மற்றும் சுங்கத் திணைக்களத்தின் பதிவு விபரங்களைப் பெற்றுக் கொள்ளல் முதலிய விடயங்களை நிறைவேற்றிக் கொள்வதற்கு இதன் மூலம் எதிர்பார்க்கப்படுகின்றது.

குழுவினால் வினவப்பட்ட போது பிரதிக் கணக்காய்வாளர் அதிபதியினால் வெளியிடப்பட்ட கருத்து யாதெனில் வாகனங்களின் பதிவு விடயங்களை மோட்டார் வாகனப் பதிவுத் திணைக்களங்களில் மேற்கொள்ளும் போது சுங்கத் திணைக்களம் வழங்கும் தகவல்களை மாற்றக்கூடியதாக இருக்கின்றமை என்பதாகும். சுங்கத் திணைக்களத்தின் தகலுக்கு அமைய ASYCUDA முறைமையானது அரசாங்கக் கணக்காய்வு முறைமை மற்றும் உள்ளகக் கணக்காய்வு முறைமை ஆகிய இரண்டு முறைமைகளுடனும் இணைகின்றது. ஏதாவதொரு தவறு இழைக்கப்பட்டு விட்டால் அந்தத் தவறு முறைமையினுள் பதியப்படும். ஆகையால் எந்தவிதத்திலும் மாற்றத்தைச் செய்ய முடியாது. எவ்வாறாயினும் வாகனங்களை விடுவித்தல் மற்றும் பதிவு செய்தல் ஆகியவற்றுக்கு இடையில் மானிட நடவடிக்கை நிகழ்வதால் தகவல் இலத்திரனியல் முறையில் தொடர்பாடலை ஏற்படுத்துவதற்கான ஒரு முறைமையை மேம்படுத்த வேண்டும்.

வாகனங்களை விடுவித்தல் தொடர்பான விபரங்களை தரவுத்தளத்தில் உட்படுத்தும் போது தவறு நிகழக்கூடும் எனவும், அந்தப் பிரச்சினையை நிவர்த்தி செய்து கொள்ளும் வகையில் சுங்கப் பணிப்பாளர் நாயகத்துடன் பேச்சுவார்த்தை ஆரம்பிக்கப்பட்டுள்ளது எனவும் உதவிச் செயலாளரினால் (தகவல் தொழில்நுட்பம்) தெளிவுபடுத்தப்பட்டது. அவர் மேலும் கீழ்காணும் விதத்தில் குறிப்பிட்டார்.

- அமைச்சரவையினால் BOT முறைமையின் கீழ் டி-மோட்டரிங் கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.
- கொள்வனவ தொடர்பான பட்டியல் ஏற்கெனவே தயாரிக்கப்பட்டுள்ளது.
- டி-மோட்டரிங் என்ற கருத்திட்டத்தை நடைமுறைப்படுத்த முன்னர் BPA செல்லுபடியாக்கப்பட்டுள்ளது.
- இன்று SMS, கையடக்கத் தொலைபேசி, இன்டர்நெட் வசதிகள் என்பன வாடிக்கையாளர்களுக்கு வழங்கப்படுகின்றன.

கணக்காய்வு பரிசீலனையின் நிமித்தம் வசதிகள் அடங்கிய இந்த புதிய முறைமையை தாபிக்க வேண்டும் என்பது பிரதிக் கணக்காய்வாளர் அதிபதியின் அபிப்பிராயமாக இருந்தது.

வாகனங்களை அகற்றுதல் மற்றும் கணனி போன்ற இலத்திரனியல் உபகரணங்களை அகற்றுதல் தொடர்பான பிரச்சினைகள் எதிர்காலத்தில் பெரும் பிரச்சினையாக மாறக்கூடும் என்பதால் அது தொடர்பில் குழு கவனத்தைச் செலுத்தியது. வாகனங்களை இறக்குமதி செய்வது மாத்திரம் போதாது என்பதால் இந்தப் பிரச்சினைகளைக் குறைப்பதற்கு புதிய வழிகளில் தீர்வுகளைக் காண வேண்டும் என குழு தீர்மானித்தது. அவ்வாறே அரசாங்கத்தினால் இறக்குமதி செய்யப்பட்ட வாகனங்கள் தொடர்பில் கொள்கைத் தீர்மானமொன்றை மேற்கொள்வதும் மற்றும் புதிய சட்டதிட்டங்களை அறிமுகப்படுத்துவதும் அவசியமாகும்.

வாகனங்களை இறக்குமதி செய்யும் கட்டணங்களைச் செலுத்தும் நடைமுறையுடன் தொடர்புபடுவது அரச வங்கிகள் மாத்திரம் என்பதால் இந்தக் கட்டணங்களைச் செலுத்தும் முறைமை வினைத்திறனற்றது என்பது குழுவின் அபிப்பிராயமாக இருந்தது. இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு இணங்க, இந்த நடைமுறையை மாற்றியமைப்பதற்கு மத்திய வங்கி லங்கா க்ளியர் (தனியார்) கம்பனியுடன் பேச்சுவார்த்தைகளை நடத்தி வருகின்றது. லங்கா க்ளியர் (தனியார்) கம்பனியின் வங்கிச் சேவைகளுக்கான தலைவர்கள் பின்வருமாறு குறிப்பிட்டார்கள்.

- கருத்திட்டத்தைச் செயற்படுத்தலை லங்கா க்ளியர் (தனியார்) கம்பனியின் மூலம் ஆரம்பிப்பதற்கு மத்திய வங்கியினால் அறிவுரைகள் வழங்கப்பட்டுள்ளன.
- RFP (Request for Proposal) பிரேரணைக்கான கோரல்களை

சமர்ப்பிக்கும் பொருட்டு RFP தொடர்பில் பதில் கிடைக்கப்பெற்றுள்ளது.

மத்திய வங்கியின் அனுமதி கிடைக்கப்பெற்று வருகின்றன.

இலங்கை வங்கியினூடாக இலத்திரனியல் முறையில் கட்டணங்களைச் செலுத்துவதற்கான வசதிகளை தனியார் வங்கிகளுக்கும் பெற்றுக்கொடுக்க முடியும் என இலங்கை வங்கி அதிகாரிகள் குறிப்பிட்டனர்.

சாரதி அனுமதிப்பத்திரத்தின் சிப் அட்டையில் உள்ளீர்க்கப்படும் சாரதிகளுக்கு தகவுத்திறன் புள்ளிகள் வழங்குவது பற்றி குழு வினவியது.

- பொலிசும் நிதீமன்றங்களும் இந்தச் செயற்பாட்டில் சம்பந்தப்படுவதால் அவற்றுக்கும் இந்த வசதிகளைச் செய்து வழங்க வேண்டும்.
- நடைமுறையிலிருக்கின்ற சட்டதிட்டங்களைத் திருத்தும் பொருட்டு பிரேரணைகள் முன்வைக்கப்பட்டுள்ளன.

விண்ணப்பதாரர்களுக்கு மருத்து சான்று அறிக்கைகளை வழங்கும் போது அந்தச் சான்று அறிக்கை விநியோகிக்கப்படும் நிறுவனத்தின் மூலம் கணனி முறைமைக்கு பெற்றுக்கொடுக்கப்படுகின்றதா என்பது பற்றி வினவிய போது, திரு ஏ.எல்.கே.எச்.எம். பண்டார அவர்களினால் தெளிவுபடுத்தப்பட்டது யாதெனில் காலத்திற்கேற்ற தரவுகளை ஒன்றிணைத்தல் மற்றும் செல்லுபடியாகும் தன்மையை உறுதிசெய்தல் ஆகியவற்றைக் கொண்டு இந்தச் செயன்முறையை மேற்கொள்ள முடியும் என்பதாகும்.

- நடமாடும் பிரயொகங்கள் மற்றும் இணையத்தளங்கள் என்பவற்றினூடாக விவசாயிகளுக்கு தகவல்களை வழங்கும் நடைமுறை தற்பொழுது இடம்பெற்று வருகின்றது.
- இலங்கை இலத்திரனியல் முறைமையினூடாக ஏற்றுமதி உற்பத்திகளின் சான்றிதழ்கள் விநியோக முறையை உருவாக்கிய 16 நாடுகளில் ஒரு நாடாக WTO இன் கீழ் தெரிவுசெய்யப்பட்டுள்ளது.

- விவசாயத் திணைக்களத்தின் த.தொ. பிரிவினது உதவியைக் கொண்டு இறக்குமதி அனுமதிப்பத்திரங்களை விநியோகிப்பதில் த.தொ. முறைமையை அறிமுகப்படுத்துவதற்கான முன்னெடுப்புகள் மேற்கொள்ளப்பட்டிருந்தன.

விசாரிக்கப்பட்ட நேரத்தில், சுங்கப் பிரதி அத்தியட்சகர் பின்வருமாறு குறிப்பிட்டார். 'ASYCUDA முறைமையின் கீழ் ஒரு சில நிறுவனங்களுக்கு இலங்கை சுங்கத்திற்கான இணைப்பு தனி வின்டோ கருத்திட்டமாக வழங்கப்பட்டிருந்தது. தாவரங்கள் தொற்றுநீக்கும் சேவையும் குறித்த முன்னோடிக் கருத்திட்டத்தில் உள்ளடங்குகின்றது.

- இந்த செயல்முறையின் கீழ், தாவரங்கள் தொற்றுநீக்கும் சேவை உத்தியோகத்தர் இலத்திரனியல் முறைமை வசதியினூடாக தனது அங்கீகாரத்தை இலங்கை சுங்கத்திற்கு அனுப்பி வைக்கலாம்.

தேவையான எல்லா தகவல்களும் சமர்ப்பிக்கப்பட்டிருந்தால், இந்த முறைமயின் கீழ் பௌதீக சரக்குகள் பரிசோதனையின்றி கொள்கலன் சரக்குகளை விடுவித்துக்கொள்ள முடியும்.

### சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு (உ.க.பி.)

நாட்டின் உணவுப் பாதுகாப்பை உறுதிசெய்து ஆரோக்கியமின்மையைத் தடுத்து, சுகாதார நிலையை மேம்படுத்தி, தவறாக வழிநடத்தும் உணவு ஊக்குவிப்புகளைத் தடுத்து, அதனூடாக நுகர்வோரைப் பாதுகாத்து, உணவுப் பாதுகாப்பு சம்பந்தமான விடயங்கள் எழும் போது முறையான நடவடிக்கை, அயடீன் பற்றாக்குறை நோய்கள் ஒழிப்பு நிகழ்ச்சித்திட்டம் ஆகியவற்றை மேற்கொண்டு, சர்வதேச உணவு நிர்ணய ஆணைக்குழுக்கள் மற்றும் உலக வர்த்தக ஸ்தாபனம், தாவர சுகாதார உடன்படிக்கை ஆகியவற்றுடன் தொடர்பை ஏற்படுத்துதல் என்பன இப்பிரிவின் பிரதான பொறுப்புக்களாகவும் பணிகளாகவும் காணப்படுகின்றன.

- உ.க.பி. உள்ளக மற்றும் பொதுக் கணக்காய்வுக்கு உட்படுத்தப்படுகின்றது.
- 1980 ஆம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச் சட்டம் மற்றும் அதற்கான திருத்தங்கள் மற்றும் உணவுச் சட்டத்தின் கீழ் ஆக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகள் மற்றும் ஏனைய சட்டங்கள் என்பன இப்பிரிவின் ஒழுங்கமைப்பு சட்டகத்தை உருவாக்குகின்றன.
- உ.க.பி. அதன் கடமைகளை நிறைவேற்றும் வேளையில் இலங்கை சுங்கம், அரசாங்கப் பகுப்பாய்வாளர் மற்றும் ஏனைய உணவு ஆய்வுகூடங்கள் மற்றும் சுகாதார மருத்துவப் பரிசோதகர்கள் (MOH) மற்றும் சுகாதார நிறுவனம் போன்ற நிறுவனங்களுடன் தொடர்பை ஏற்படுத்துதல் வேண்டும்.
- இலங்கைக்கு உணவு வகைகளை இறக்குமதி செய்யும் போது அவை உ.க.ப. பிரிவினால் பரிசீலனைக்குட்படுத்தப்படுவதுடன் அவசியமான பரிசோதனைகள் மேற்கொள்ளப்பட்டு விதப்புரைகளும் மேற்கொள்ளப்படுகின்றன.
- அலுவலக வசதி மற்றும் மனித வளங்கள் பற்றாக்குறை மற்றும் ஏனைய பிரச்சினைகள் காரணமாக தகவல் தொழில்நுட்ப முகாமைத்துவ முறைமை காணப்படவில்லை.
- கணக்காய்வு முகாமைத்துவத்திற்கு மேலதிகமாக, உணவு நஞ்சாதல் பற்றி அறிவித்தல் மற்றும் விசாரணைகள், உணவு ஆய்வுகூட வலையமைப்பு, உள்ளூர் உணவு உற்பத்தி அனுமதிப்பத்திரம் வழங்கல், உணவு இறக்குமதித் தரவுகள், மற்றும் துறைமுக நுழைவாயில் தனி வின்டோ எண்ணக்கரு மற்றும் வருமான சேகரிப்பு போன்றவற்றுக்கு தகவல் தொழில்நுட்பம் தேவைப்படுகின்றது.

**குழுவின் அவதானிப்புகள்**

உ.க.பி. இலத்திரனியல் ரீதியான ஒரு இடர் முகாமைத்துவ முறமை மற்றும் தொடர்பாடல் ஆகியவற்றை சுங்கத்துடன் இணைந்து உருவாக்குவதற்காக தொழிற்படுவதால் சட்டமுறையான வணிகப் பொருட்கள் விரைவில் விடுவிக்கப்படும் என்பதுடன் சட்டவிரோதமான வணிகம் மிகச்சிறந்த வினைத்திறன் வாய்ந்தவொரு விதத்தில் அடையாளப்படுத்தவும்படும்.

**இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம்**

தர நிர்ணயம் தொடர்பான சேவைகளை வழங்குதல் (எஸ்.எல்.எஸ். குறியீடு), 120 வகையான பொருட்களை விடுவிப்பதற்கு முன்னர் இறக்குமதி பரிசீலனை முறைமை சான்றிதழை வழங்குதல், (ஐஎஸ்ஓ 9000 மற்றும் ஐஎஸ்ஓ 14000 போன்ற முகாமைத்துவ முறைமை சான்றிதழ்கள் வழங்கப்படுகின்றன) உபகரணங்களுக்கான ஆய்வுகூட மதிப்பாய்வு சார்ந்த சேவைகள், கைத்தொழில் துறைகள் அவற்றின் உற்பத்திப் பொருட்களை பரிசோதனை செய்வதற்கான ஆய்வுகூட சேவைகள், கைத்தொழில் தர முகாமைத்துவத்திற்கான பயிற்சிகளை வழங்குதல் ஆகிய பணிகள் இந்த நிறுவனத்தினால் மேற்கொள்ளப்படுகின்றன.

இலங்கை தரக் கட்டுப்பாட்டு நிறுவனம் இறக்குமதி சம்பந்தமான சோதனைகளை மேற்கொள்ளும் அதேநேரம் போத்தலில் அடைக்கப்பட்ட நீருக்கான அங்கீகாரத்தை சுகாதார அமைச்சுக்கு வழங்குவது தொடர்பிலும் சுங்கம் போன்ற ஏனைய நிறுவனங்களுடன் தொடர்புபட்டுத் தொழிற்படுகின்றது.

அத்தகைய நிறுவனங்கள் வழங்கும் சேவைகளின் தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு

- தற்சமயம் தகவல் தொழில்நுட்பத்தினூடாக சேவைகளை வழங்கக்கூடிய தரமான முறைமையொன்று காணக்கூடியதாகவில்லை.
- தகவல் தொழில்நுட்பத்தின் பயன்பாடு பிரதேச மட்டங்களில் காணப்படுகின்றது.
- இலங்கை சுங்கம் போன்ற வெளி நிறுவனங்களுடன் இணைந்து பணியாற்றும் போது தகவல் தொழில்நுட்ப முறைமையொன்றை ஏற்படுத்துவதற்கு எதிர்பார்க்கப்படுகின்றது.
- இந்நிறுவனம் தற்சமயம் ASYCUDA முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளது.
- இறக்குமதிகள் தொடர்பாக இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் தர உத்தரவாதப் பிரிவினால் மேற்கொள்ளப்பட்ட தீர்மானமானம் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு முறையாக இடமாற்றப்பட்டது. ஆயினும் தற்போது அவற்றுக்கு தீர்மானத்தை இலத்திரனியல் ரீதியாக இலங்கை சுங்கத்திற்கு இடமாற்றம் செய்வதற்கான அணுகுமுறை ASYCUDA முறைமையினூடாக வழங்கப்பட்டுள்ளது.
- இச்செயற்பாட்டை இலகுவாக்கும் வகையில் மற்றொரு கருவி சுங்கத்தில் வழங்கப்பட்டுள்ளது. ஆயினும் இது இன்னும் பரிட்சாத்த நிலையிலுள்ளது.
- வேறு எந்தவொரு விஷேட இணையவழிக் கொடுக்கல்வாங்களும் இல்லை.
- இணையத்தளத்தை மீள்கட்டமைப்பதற்கு வெளிவாரியான சேவை பெறப்பட்டுள்ளது.
- வாடிக்கையாளர்கள் தமக்கு வழங்கப்பட்ட சேவைகளுக்கான கட்டணத்தை இணையவள மூலம் செலுத்தக்கூடிய வாய்ப்பு 3-4 மாதங்களுக்குள் ஏற்படுத்தப்படும்.
- வேறு பிரிவுகளுடன் ஒருங்கிணைந்த தகவல் முகாமைத்துவ முறைமை இல்லாமையானது பிரதான பிரச்சினையாக காணப்படுகின்றது.
- இந்த முறைமையை அபிவிருத்தி செய்வதற்கு ஆலோசகர் ஒருவரின் ஒத்துழைப்புடன் கருத்திட்டமொன்று ஆரம்பிக்கப்படும். தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு வசதியை மேம்படுத்த வேண்டியுள்ளது.

- எதிர்காலத் திட்டங்கள்
- ஒருங்கிணைந்த முகாமைத்துவ முறைமை மற்றும் தகவல் தொழில்நுட்ப உட்கட்டமைப்பு மேம்பாட்டு அபிவிருத்திக் கருத்திட்டங்களை நடைமுறைப்படுத்துதல்.
- தகவல் தொழில்நுட்ப பிரிவு அபிவிருத்தி செய்யப்படும்.

**இலங்கை வங்கி**

- வாடிக்கையாளர்கள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதிக் கட்டணங்களை இணையவழி மூலம் அல்லது வங்கிக்கு நேரடியாக வருகை தருவதன் மூலம் செலுத்தலாம்.
- உறுதிப்படுத்தல் மேற்கொள்ளப்படுகின்றது.
- கொடுப்பனவுகள் இணைய வழியாக சுங்கத் திணைக்களத்திற்கு அனுப்பப்படுகின்றது.
- சுங்கத் திணைக்களம் கொடுக்கல்வாங்கல்களை உள்ளக முறைமையொன்றில் செல்லுபடியாக்குகின்றது. கிடைக்கப்பெறும் தகவல் கொடுக்கல்வாங்கல்களுடன் பொருந்தாமல் இருக்கும் பட்சத்தில் அவை மறுக்கப்படுகின்றன.
- சுங்கத் திணைக்களத்திடமிருந்து ஒப்புரவு செய்யப்படுகின்றது.
- இலங்கை வங்கியால் வழங்கப்படும் அறிக்கைகளின் உதவியைக் கொண்டு சுங்கத்தால் இணக்கல்செய்யப்படுகின்றது.

**பின்னிணைப்பு பீ.2**

**வினாக்கொத்தும் பதில்களும்**

1. குழுவினால் அனுப்பப்பட்ட வினாக்கொத்துக்குப் பதிலளிக்கும் வகையில் சுங்கத் திணைக்களத்தால் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகத் தகவல்கள்

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளின் மொத்த எண்ணிக்கை சுங்கப் பிரகடனத்தின் பிரகாரம் எவ்வளவு?

  2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் இறக்குமதி தொடர்பான பிரகடனங்கள் பின்வருமாறு:

  2015 ஆம் ஆண்டு : 619,140 சுங்கப் பிரகடனங்கள்

  2016 ஆம் ஆண்டு : 296,784 சுங்கப் பிரகடனங்கள்

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் ஆவணங்கள் சரிபார்த்தல் /பரிசோதனைகள் இன்றி விடுவிக்கப்பட்ட இறக்குமதி செய்த சரக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?

  ஆவண சரிபார்த்தல் அல்லது பரிசோதனை இன்றி எந்தவிதமான சரக்குகளும் விடுவிக்கப்படவில்லை. இருப்பினும் சரக்குகளின் ஒரு பகுதியை பரிசோதனை இன்றி விடுவிக்கலாம்.

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் கப்பல் சரக்குகள் ஒப்பாய்வு/பரிசோதனை இன்றி விடுவிக்கப்பட்ட இறக்குமதி செய்த சரக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?

  இதற்கான பதிலும் மேற்குறிப்பிடப்பட்டதை போன்றதாகும். பரிசோதனை இன்றி எந்தவிதமான கப்பல் சரக்குகளும் விடுவிக்கப்படவில்லை. இருப்பினும் சரக்குகளின் ஒரு பகுதியை பரிசோதனை இன்றி விடுவிக்கலாம்.

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் சட்டவிரோத இறக்குமதிகளென (தற்போது விசாரணையின் கீழுள்ளவை அடங்கலாக) சரக்குத் தொகுதிகளின் மொத்த எண்ணிக்கை யாது?

  2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் பதிவு செய்யப்பட்ட சுங்க வழக்குகள் முறையே 10,436 மற்றும் 2084 ஆகும்.

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளில் மேற்கொள்ளப்பட்ட அறவீடுகளின் மொத்தத் தொகை முறையே ரூ.5,021,583,233.40, ரூ.2,719,568,711.00 ஆகும்.

  2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் இறக்குமதிகளினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் யாது?

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில்இறக்குமதிகளினால் சேகரிக்கப்பட்ட மொத்த வருமானம் பின்வருமாறு:

  2015 ஆம் ஆண்டு : ரூ.625,378,027,967.00 (VAT வரி அடங்கலாக)

  2016 ஆம் ஆண்டு: ரூ.350,327,074,542.00

- சட்ட ரீதியான வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கும் மற்றும் சட்டவிரோதமான வர்த்தகத்தைத் தடைசெய்வதற்கும் நடைமுறையிலுள்ள அபாயநேர்வு முகாமைத்துவ முறைமை யாது?

  இறக்குமதி அபாயநேர்வு முகாமைத்துவ முறைமை தானியக்கப்படுத்தப்பட்டுள்ளது.

- சிங்கிள் வின்டோ முறைமையின் குறிக்கோள்களும் தற்போதைய நிலையும் யாது?

  இந்த சிங்கிள் வின்டோ முறைமையின் குறிக்கோள் அங்கீகாரங்களையும் உரிமங்களையும் இலத்திரனியல் ரீதியாகப் பெறும் வகையில் சகல ஒழுங்குபடுத்தல் முகவர்நிலையங்களையும் ஒன்றிணைப்பதாகும். இதனை மேற்கொள்வதற்கு சுங்கம் தயாராகவிருக்கின்றது என்பதே தற்போதைய நிலையாகும். ஆனால் ஒழுங்குபடுத்தல் முகவர்நிலையங்களில் அதிகமானவை கணனிமயப்படுத்தப்படவில்லை.

2. **குழுவினால் அனுப்பப்பட்ட வினாக்கொத்துக்கு பதிலளித்து இறக்குமதி, ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தினால் சமர்ப்பிக்கப்பட்ட மேலதிகத் தகவல்கள்**

- 2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டுப் பகுதியில் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமத்தைத் (ICL) தேவைப்படுத்திய இறக்குமதி சரக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?

  2015 மற்றும் 2016 ஆம் ஆண்டுகளின் முதல் அரையாண்டு காலப்பகுதியில் விநியோகிக்கப்பட்ட இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமங்களின் மொத்த எண்ணிக்கை கீழே தரப்பட்டுள்ளது.

| காலப்பகுதி | ICL எண்ணிக்கை |
|---|---|
| 2015 ஆம் ஆண்டு (2015.01.01 - 2015.12.31) | 14927 |
| 2016 ஆம் ஆண்டு (2016.01.01 - 2016.06.30) | 7112 |

- பரிந்துரைக்கும் அதிகார அமைப்புக்கு அமைய மேலேயுள்ளதன் விபரம் யாது? உ-ம்: களைகொல்லிகள் பதிவாளரினது பரிந்துரையின் பேரில் ICL ஐ தேவைப்படுத்திய களைகொல்லிகளின் இறக்குமதிகளினது எண்ணிக்கை யாது?

| இலக்கம் | பரிந்துரைக்கும் அதிகார சபை | உரிமங்களின் எண்ணிக்கை |
|---|---|---|
| 1 | தொலைத்தொடர்புகள் ஒழுங்குறுத்துகை ஆணைக்குழு | 3831 |
| 2 | தேசிய மருந்துகள் ஒழுங்குறுத்துகை அதிகார சபை | 2106 |
| 3 | விலங்கு உற்பத்திகள் மற்றும் சுகாதாரத் திணைக்களம் | 1974 |
| 4 | பூச்சிநாசினிகள் பதிவாளர் திணைக்களம் | 1427 |
| 5 | அரச வர்த்தகக் கூட்டுத்தாபனம் | 1106 |
| 6 | பெற்றோலியம் மற்றும் பெற்றோலிய உற்பத்திகள் அமைச்சு | 945 |
| 7 | கடல் சுற்றாடல் பாதுகாப்பு சபை | 414 |
| 8 | மதுவரித் திணைக்களம் | 334 |
| 9 | ஆயுர்வேதத் திணைக்களம் | 300 |
| 10 | ஏனைய (49 முகவர்நிலையங்கள்) | 2490 |
| | மொத்தம் | **14927** |

- **இறக்குமதி சரக்குகளை ICL இன் கீழ் அகற்றுவது தொடர்பில் பரிந்துரைக்கும் அதிகார சபை மற்றும் சுங்கத்தின் வகிபங்குகள் எவை?**

  ICL ஐ பெறுவதற்கு முன்னர் சம்பந்தப்பட்ட பரிந்துரைக்கும் அதிகார சபையினால் பரிந்துரைக் கடிதம் வழங்கப்படும். பொருட்கள் வந்து சேர்ந்த பின்னர் அவ்வாறான இறக்குமதிப் பொருட்களை இறக்குமதித் தரப்புகளுக்கு விடுவிப்பதற்கு முன்னர் இறக்குமதிக் கட்டுப்பாட்டு உரிமம் மற்றும் மாதிரிகள் உள்ளடங்கலாக சகல ஆவணங்களும் சுங்கத்தினால் பரிசீலிக்கப்படும்.

- **இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை விடுவிப்பதற்கு சுங்கத்துடன் இறக்குமதித் தரப்புகளுடனும் இணைந்து பணியாற்ற ஏற்புடைய விதத்தில் நடைமுறைப்படுத்தப்படும் தற்போதைய செயல்விதிமுறைகள் யாவை? ICL இன் மூலம் முறைமையை மேம்படுத்த எத்தகைய நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**

  இறக்குமதித் தரப்புகளுக்கு ICL விநியோகிக்கப்பட்ட பின்னர் பொருட்களை இறக்குமதி செய்ய முடியும். உரிமங்களைப் பெற்றுக்கொண்டதும் அவ்வாறான

பொருட்களை இறக்குமதி செய்வதற்கு இறக்குமதித் தரப்புகள் தகுதிபெறும். பொருட்கள் வந்து சேர்ந்ததும் இலங்கை சுங்கத்தின் ASYCUDA ஒன்லைன் முறைமையின் மூலம் இறக்குமதி செய்யும் தரப்புகள் (CUSDEC) களை சமர்ப்பிக்க வேண்டும். பின்னர் கடன் நோக்கத்திற்காக CUSDEC ஐ கப்பல் சரக்குகளை இறக்குமதி செய்யும் ஏனைய சகல தரப்புகளும் ஏற்றுமதிகள் மற்றும் இறக்குமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்திற்கு கையளிக்க வேண்டும்.

ICL ஐ பற்றுரைத்த பிறகு, பொருட்களை விடுவிப்பதற்கு சகல ஆவணங்களும் இலங்கை சுங்கத் திணைக்களத்திற்கு சமர்ப்பிக்கப்படுதல் வேண்டும்.

உரிமம் மற்றும் பற்று விபரங்களை பரிமாறுவதற்காக இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுத் திணைக்களத்தின் உரிமம் வழங்கலும் பற்று முறைமையும் இலங்கை சுங்கத்தின் ICT முறைமையுடன் இணைக்கப்பட்டுள்ளன.

- **சட்டபூர்வமான வர்த்தகத்திற்கு வசதியளிப்பதற்கும் சட்டவிரோத வர்த்தகத்தைத் தடைசெய்வதற்கும் எத்தகைய அபாயநேர்வு முகாமைத்துவ முறைமை நடைமுறைப்படுத்தப்படுகின்றது?**

  ஏற்றுமதிக் கட்டுப்பாட்டுப் பொருட்களும் மற்றும் தடைசெய்யப்பட்ட பொருட்களும் 1969 இன் 1 ஆம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டு சட்டத்தின் கீழ் அதிவிஷேட வர்த்தமானி அறிவித்தலின் மூலம் பிரகடனப்படுத்தப்பட்டுள்ளன. இவ்வாறான பொருட்களை ஒருவர் ICL இன்றி இறக்குமதி செய்தால் அல்லது தடைசெய்யப்பட்டுள்ள பொருட்களை இறக்குமதி செய்தால் அவ்வாறான இறக்குமதிப் பொருட்கள் சுங்கத்தினால் தடுத்துவைக்கப்படும்.

**கொடுப்பனவு விதிகள் ஒழுங்கு விதிகளை அமுல்படுத்தும் முகமாக,**

- முற்கொடுப்பனவுத் தொகையானது 50000 அமெரிக்க டொலர்கள் அல்லது அதற்குச் சமமான வெளிநாட்டு நாணயத் தொகை வரை வரையறுக்கப்பட்டுள்ளது. முற்கொடுப்பனவுத் தொகையானது 50000 அமெரிக்க டொலர்களை மிகைத்தால், வெளிநாட்டு வங்கி உத்தரவாதத்தினை சமர்ப்பிப்பது அவசியமாகும். அல்லது முற்கொடுப்பனவுத் தொகையினை குஊடீரு கணக்கு மூலம் மாற்ற வேண்டும்.
- மோட்டார் வாகன இறக்குமதியில் பூர்த்தி செய்யப்பட வேண்டிய சகல தேவைப்பாடுகளையும் திருப்தி செய்வதை அனுமதிக்கும் நாணயக் கடிதத்தினை உருவாக்கிய பின்னரே மோட்டார் வாகனங்கள் இறக்குமதி செய்யப்படல் வேண்டும்.
- கப்பலில் ஏற்றும் ஆவணங்களில் ஏதேனும் முரண்பாடு காணப்படின் ஆவணங்களை விடுவிப்பதற்கு சகல வர்த்தக வங்கிகள் நேரடி இறக்குமதியாளர்களும் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாடுகள் கட்டுப்பாட்டாளர் நாயகத்திடமிருந்து அங்கீகாரத்தினைப் பெறவேண்டும்.
- “செயற்பாட்டு அறிவுறுத்தல்களாக” சகல வர்த்தக வங்கிகளுக்கும் வழங்கப்படும் ஒவ்வொரு அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலும் இறக்குமதிக் கட்டுப்பாடுகள் ஒழுங்குவிதிகளைப் பற்றிய விழிப்புணர்வினையும் ஏற்படுத்த வேண்டும்.

  அரசாங்கக் கணக்குகள் பற்றிய குழுவின் அறிவுறுத்தல்கள் மற்றும் 1969ம் ஆண்டின் 1ம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச்

சட்டத்தின் ஏற்பாடுகள் ஆகியவற்றிற்கு அமைவாக, சட்டவிரோத வர்த்தகத்தினைக் கண்காணிப்பதற்கு ஒரு46 விசாரணைப் பிரிவினை நிறுவுவது என்கின்ற தீர்மானம் எடுக்கப்பட்டது.

- **பயன்படுத்திய மோட்டார் வாகனங்களுக்காக ICL னை விநியோகிப்பது பற்றிய கொள்கை என்ன? முதலீட்டுச் சபை கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்படும் ICLன் கீழ் உள்ளடக்கப்படும் இறக்குமதிகளின் தற்போதைய நிலை என்ன?**

  மோட்டார் வாகனங்களுக்காக ICLனை விநியோகிக்கும் கொள்கையானது ஏற்கனவே அபிவிருத்தி மூலோபாய சர்வதேச வர்த்தக அமைச்சினால் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது. முதலீட்டுச் சபை கம்பனிகளுக்கு ICLனை விநியோகிக்கவென விசேட முறை இல்லை. ICLஇன விநியோகிக்கும் முறை ஏனைய கம்பனிகளுக்குப் போன்றதேயாகும். (முதலீட்டுச் சபை சாராத கம்பனிகள்)

- **இறக்குமதியாளர்களிடமிருந்து என்னென்ன கட்டணங்கள் திணைக்களத்தினால் அறவிடப்படுகின்றன? இந்தக் கட்டணங்களின் கொள்கை/ காரண விளக்கம் யாது?**

  1969ம் ஆண்டின் 1ம் இலக்க இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் கௌரவ அமைச்சருக்கு வழங்கப்பட்டுள்ள அதிகாரங்களினால் இறக்குமதிகள் மற்றும் ஏற்றுமதிகள் உரிமக் கட்டணங்களும் ஏனைய கட்டணங்களும் அதிவிசேட வர்த்தமானி அறிவித்தலில் வெளியிடப்பட்டுள்ளன.

**3. விவசாயத் திணைக்களத்தின் தொற்றுத் தடை காப்புப் பிரிவிற்கு அனுப்பிய வினாக்கொத்திற்கு பின்வருமாறு பதிலளிக்கப்பட்டுள்ளது.**

- **2015ன் போதும் 2016ன் முதல் அரையாண்டின் போதும் திணைக்களத்தின் அங்கீகாரங்களைத் தேவைப்படுத்திய இறக்குமதிச் சரக்குகளின் மொத்த எண்ணிக்கை யாது?**

| வருடம் | அங்கீகரிக்கப்பட்ட இறக்குமதி அனுமதிப்பத்திரத்தின் எண்ணிக்கை |
|---|---|
| 2015 | 32201 |
| 2016 (ஜூன் வரை) | 2034 |

- **இறக்குமதி செய்யப்பட்ட சரக்குகளை அகற்றுவதற்கு சுங்கத்துடனும் இறக்குமதியாளர்களுடனும் பணியாற்றசற்று நடைமுறைப்படுத்தப்படும் தற்போதைய செயல்விதிகள் யாவை? ICT மூலம் முறைமையினை மேம்படுத்த என்ன நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன?**
  - விமான சேவையினால் அல்லது இறக்குமதியாளரினால் வருகையினை அறியத்தரல்
  - இறக்குமதியுடன் தொடர்புடைய ஆவணப் பரிசீலனைக்கு பிறகு இறக்குமதியாளர் சுங்க நுழைவினைப் பெற வேண்டும்.
  - அதன் பின்னர், தீர்மானத்திற்காக இறக்குமதிச் சரக்கு தாவரத் தொற்றுத் தடைகாப்புப் பிரிவிற்கு ஆற்றப்படுத்தப்படும்
  - இறக்குமதிச் சரக்கு வந்து சேர்ந்ததும், உள்வரும் துறைமுகத்தில் இறக்குமதியாளர் இறக்குமதியின் விபரங்களை தொற்றுத் தடை வாப்புப் பிரிவுப் பரிசோதகருக்கு வழங்க வேண்டும். அவர் தாவர இறக்குமதிப் பிரிவுப் படிவத்தினைப் பயன்படுத்தி அகற்றலுக்குத் தேவையான ஆலோசனையினை வழங்குவார்.
  - தேவைப்படுத்தப்படும் ஆவணங்களைப் பரிசீலித்த பின்னர் இறக்குமதிச் சரக்கு தாவரத் தொற்றுத் தடைவாப்புப் பிரிவுப் பரிசோதகரினால் பரிசீலிக்கப்படும். (தாவரத் தூய்மைச் சான்றிதழ், புகையூட்டித் தூய்மை செய்தல் சான்றிதழ், சுகாதாரச் சான்றிதழ், ISTA, GMO அல்லாமை, இன்னும் பிற)
  - இறக்குமதி சட்டபூர்வமானதாகவும் அனுமதிப் பத்திர நிபந்தனைகள் பூர்த்தி செய்யப்பட்டுமிருக்கையில், இறக்குமதிச் சரக்கு விடுவிப்பதற்க உட்படும்.
  - அவசியமெனக் கருதப்படுமிடத்து, இறக்குமதிச் சரக்கு மேலதிக பரிசீலனைக்கு உட்பட்டு பீடைகள் இல்லாதவிடத்து, நுழைவுத் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்த பின்னர் விடுவிப்பதற்கு உட்படும்.
  - அவசியமெனக் கருதப்படுமிடத்து, விடுவிப்பதற்கு முன்னர் இறக்குமதிச் சரக்கு விதிமுறைச் செயற்பாட்டிற்க உட்படுத்தப்படும்.
  - தேவைப்படுத்தப்படும் அங்கீகாரம் மற்றும் சான்றிதழ்கள் இல்லாதவிடத்தும் தாவரம் அல்லது தாவர உற்பத்தில் அபாயகரமான நோய்க் காவிகளையும் பூச்சிப் பீடைகளையும், சிறுபூச்சிகளையும், நீளப் புழுக்களையும்

களைகளையும் கொண்டுள்ள போதும் இலங்கையினுள் நுழைவு மறுக்கப்படும்.

- **முறைமையினை மேம்படுத்த:-**

  அபாயகரமான பீடைகளை அடையாளம் காணுதல் தொடர்பாகவும், எமது வர்த்தகப் பங்காளர்களின் தேவைப்பாடுகள் தொடர்பாகவும், வசதிகளை மேம்படுத்துவது தொடர்பாகவம் கணனி வலையமைப்புத் தொடர்பாகவும் தாவரத் தொற்றுத் தடைகாப்பு அதிகாரிகளுக்குப் பயிற்சியளித்தல், வெளிநாட்டுச் சந்தைகளில் போட்டியிடுவதற்கு எமது நாட்டிற்கு மிகவும் முக்கியமானதாகும்.

- **சட்டபூர்வமான வர்த்தத்தினை விதிப்படுத்தவும் சட்டவிரோத வர்த்தகத்தினை எதிர்ப்பதற்கும் என்ன அபாயநேர்வு அமுலிலுள்ளது?**

**சட்டபூர்வமான வர்த்தகத்திற்காக**

இலங்கையிலுள்ள தாவரங்கரளையும் தாவர உற்பத்திப் பொருட்களையும் இறக்குமதி செய்வதற்கு இறக்குமதி அனுமதிப் பத்திரம் கட்டாயம் பெறப்படவேண்டும் என்று ஒரு தேவைப்பாடாகும்.அனுமதிப்பத்திரத்திற்காக ஒருவர் விண்ணப்பிக்கையில் அந்த விண்ணப்பம் ஒழுங்காக இருந்து இறக்குமதி செய்யப்படவுள்ள பொருள் தடைசெய்யப்படாத பொருளாக இருக்கையில் இரண்டு வாரங்களில் அனுமதிப்பத்திரம் விநியோகிக்கப்படும். அனுமதிப் பத்திரம்

மூன்று (3) மாதங்களுக்குச் செல்லுபடியாகக் கூடியதாகும்.குறிப்பிட்ட சூழ்நிலைகளில் இதனை மேலும் 03 மாதங்களுக்கு நீடிக்கமுடியும். இறக்குமதி செய்யப்படும் சரக்கு பீடைகள் இன்றி இருப்பது பற்றிய குறிப்பிட்ட நிபந்தனைகளை அனுமதிப் பத்திரம் விதிக்கின்றது. மறு முனையில் ஏற்றுமதியாளரும் இறக்குமதியாளரும் இந்த நிபந்தனைகள் பூர்த்தி பூர்த்தி செய்யப்படுவதற்குப் பொறுப்புடையவர்களாவர்.இறக்குமதி செய்யப்படும் சரக்கு சான்றிதழ்களைக் கொண்டிருக்கவேண்டும். விசேடமாக , தாவரத் தூய்மைச் சான்றிதழ் சர்வதேச விதைப் பரிசீலனை “சுங்கச்” (ISTA) சான்றிதழ், மரபணுரீதியாக மாற்றம் செய்யப்படாத தாவரம் எனும் சான்றிதழ்.

இறக்குமதி செய்யப்பட்ட தாவரம் மற்றும் தாவர உற்பத்திகள் தாவர தொற்றுத் தடைகாப்பு அதிகாரியினால் பரிசீலிக்கப்படும். தேவையேற்படின், பொருளானது பீடைகள் உள்ளனவா என்பதற்காக பரிசீலிக்கப்படும். இது ஆய்வுகூடப் பரிசோதனையினை உள்ளடக்கலாம். சிலவேளைகளில் றெக்குமதி செய்யப்படும் சரக்கிலுள்ள சாத்தியமான ஊடுருவும் பீடைகளைக் கொல்ல அவை குறிப்பிட்ட வெதயியல் செயன்முறைக்கு உட்படுத்தலாம்.

**சட்டவிரோத வர்த்தகத்திற்கு .**

**எந்தவிதமான சட்டவிரோதமான இறக்குமதிகளும் ஒன்றில் அழிக்கப்படும் அல்லது எந்த நாட்டிலிருந்து இறக்குமதி செய்யப்பட்டதோ அந்த நாட்டிற்கு மீண்டும் அனுப்பப்படும்.**

- **சட்டபூர்வமான வர்த்தகத்தினை வசதிப்படுத்த, ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் ஏதாவது பரஸ்பர அங்கீகார உடன்படிக்கை/ முறைமை அமுலுலுள்ளதா? ஆம்**

ஒழுங்கமைக்கப்பட்ட பீடைக் கரிசணைகளுடன் தொடர்புடைய இறக்குமதி செய்யும் நாட்டின் இறக்குமதித் தேவைப்பாடுகளைப் பூர்த்தி செய்யும் 12 தாவரத் தூய்மைச் சான்றிதழ். நாடுகளுக்கிடையில் புரிந்துணர்வு உடன்படிக்கையில்

கைச்சாத்திடல். NPOக்களுக்கு மத்தியில் தகவல்களைப் பகிர்வதற்கு நேரடித்தொடர்பு.

- **முதலீட்டுச் சபைக் கம்பனிகளினால் இறக்குமதி செய்யப்படும் சம்பந்தப்பட்ட இறக்குமதி சரக்குகளின் தற்போதைய நிலை என்ன?**

  மு.ச. சில கம்பனிகள் தாவர தொற்றுநீக்கல் ஒழுங்குவிதிகளுக்கு இணங்க சரக்குகளை இறக்குமதி செய்கின்றன.

- **இறக்குமதியாளர்களிடமிருந்து திணைக்களத்தினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவை? இவ்வாறான கட்டணங்களின் கொள்கைக்கான விளக்கம் யாது?**

  கட்டணங்கள் 1981 நவெம்பர் மாதம் 02,வர்த்தமானி அறிவித்தலில் குறித்துரைக்கப்பட்டுள்ளன. அவை மிகவும் அற்பமானவையும் நகைப்புக்குரியனவையுமாகும். உதாரணம் ,- தாவத்தூய்மைச் சான்றிதழுக்கான தாவரத் தொற்றுத் தடைகாப்புக்கட்டணம் 12.00 ரூபா மாத்திரமே. இறக்குமதி அனுமதிப்பத்திரம் இலவசமாக விநியோகிக்கப்படுகின்றது.

  PQS விமானநிலையத்தில் இறக்குமதி சரக்கொன்றிற்கான இறக்குமதி பரிசீலனைக் கட்டணம் 150.00 ரூவாகும். ஓர் அறிவியல் செயற்பாடான பீடையினை அடையாளம் காண்பதற்கான தாவரத் தொற்றுத் தடைகாப்புப் பரிசீலனை கட்டணமே இதுவாகும். எவ்வாறாயினும் இந்தக் கட்டணங்கள் துறைமுகத்தில் இறக்குமதிச் சரக்கிற்கானவையாகக் கருதப்படுவதில்லை. ஏனெனில் இறக்குமதியாளர் துறைமுக வளவில் பண்டகொடுயியல் கட்டணங்களைச் செலுத்தினர்.

**4. குழுவினால் அனுப்பப்பட்ட வினாகொத்திற்கான சுகாதார அமைச்சின் உணவுக் கட்டுப்பாட்டுப் பிரிவு பின்வருமாறு பதிலளித்துள்ளது.**

- **உணவு இறக்குமதிகளின் பரிசீலனையினதும் மெய்த்தெரிவாய்வினதும் சட்டரீதியான அடிப்படைக் குறிக்கோளும்.**

  1980 ம் ஆண்டின் 26 ஆம் இலக்க உணவுச்சட்டம் ஏனைய விடயங்களின் மத்தியில் உணவு இறக்குமதியினை உள்ளடக்குகின்றது. எந்த உணவினதும் உற்பத்தி, இறக்குமதி , விற்பனை விற்பனைக்குட்படுதல், களஞ்சியப்படுத்தல் அல்லது விநியோகம் ஆகியவற்றிற்கான உணவுச்சட்டம் ஒழுங்குபடுத்தி கட்டுப்படுத்துகின்றது.

  சுகாதாரச் சேவைப் பணிப்பாளர் நாயகம் சட்டத்தினால் பிரதம உணவு அதிகார சபையினால் நியமிக்கப்படுகின்றார். நாட்டினுள் உணவு நுழைவு ஸ்தானங்களில் உள்ள இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பரிசீலனைப் பிரிவிற்கு (IFIU) தகைமைவாய்ந்த அதிகாரம் பெற்ற உத்தியோகத்தர்களை சுகாதார சேவைப் பணிப்பளர் நாயகம் நியமித்துள்ளார்.

  தொற்றுக்குள்ளான, தரக்குறைவான உணவின் தாக்கங்களிலிருந்து நாட்டினுள் நுகர்வோரைப் பாதுகாப்பதே இறக்குமதிப் பரிசீலனையின் அடிப்படைக் குறிக்கோளாகும்.

- 2015 லும் 2016 முதல் அரையாண்டின் போதும் சுகாதார அமைச்சின் அங்கீகாரங்களைத் தேவைப்படுத்திய இறக்குமதி சரக்குகளின் மொத்த எண்ணிக்கை.

| வருடம் | இறக்குமதிச் சரக்குகள் |
|---|---|
| 2015 | 39495 |
| 2016 | 22814 |

- **சுங்கம் மற்றும் இறக்குமதியாளர்களுடன் பணியாற்ற ஏற்று நடைமுறைப்படுத்தப்படும் செயல்விதி: ICT மூலம் முறைமையினை மேம்படுத்த எடுக்கப்பட்டுள்ள நடவடிக்கைகள்**

  இறக்குமதி செய்யப்பட்ட உணவு உற்பத்திப் பொருட்களின் தன்மை பற்றிய பூர்வாங்க மதிப்பீட்டிற்காகவும் மேலதிக விசாரணைகளுக்காகவும் (தேவையேற்படின் மாதிரிகளின் ஆய்வுகூட பகுப்பாய்வு உள்ளடங்கலாக) இறக்குமதிச் சரக்குகளை இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பரிசீலனை பிரிவிற்கு வழமையாக ஆற்றுப்படுத்துகின்ற சுங்கம், இறக்குமதிச் சரக்கினை விடுவிப்பதற்காக அல்லது மேலதிக விசாரணைகளுக்காக இறக்குமதிச் சரக்கினைத் தடுத்து வைப்பதற்காக / அல்லது மேலதிக நடவடிக்கைகளுக்காகவும் அவ்வாறான நடவடிக்கை பற்றி பிரதம உணவு அதிகாரசபைக்கு அறிவிப்பதற்காகவும் இறக்குமதிச் சரக்கின் இயைபுறல் மட்டம் தொடர்பாகச் சுங்கத்திற்கு பரிந்துரைகளை வழங்குகின்றது.

  இறக்குமதிச் சரக்குகள் சுங்கத்தினால் வெளி ஆயத்திற்கு அல்லது உள் ஆயத்திற்கு அனுப்பி வைக்கப்படுகின்றன. உள் ஆயத்திலே, இறக்குமதிச் சரக்குகள் சுங்கத்துடனான கூட்டுப் பரிசீலனைக்காக இறக்குமதி செய்யப்பட்ட உணவுப் பரிசீலனைப் பிரிவிற்கு வருகின்றன. இங்கே பண்படத்திற்கு அமைய, முன் தீர்மானிக்கும் மாதிரி எடுத்தல் அட்டவணைக்கு ஏற்பவும் மாதிரி எடுத்தல் திட்டத்திற்கு ஏற்பவும் மாதிரிகள் பெறப்படுகின்றன.

*தகவல் தொடர்பாடல் தொழில்நுட்பத்தினூடாக* (ICT) முறைமையை மேம்படுத்த எடுக்கப்பட்ட நடவடிக்கைகள்: சுங்கத் திணைக்களத்தின் ASYCUDA முறைமையின் கீழ் ICT முறைமையொன்று உள்ளது. இறக்குமதி உணவுப் பரிசோதனைப் பிரிவில் கணனிகள் பொருத்தப்பட்டு ஆரம்ப பயிற்சிகள் அலுவலர்களுக்கு வழங்கப்பட்டுள்ள போதிலும் இந்த முறைமை இன்னும் இந்தப் பிரிவுக்கு விஸ்தரிக்கப்படவில்லை. தாமதங்களை ஏற்படுத்தக் கூடிய ஏதாவது பிரச்சினைகள் எழுமாயின் அது தொடர்பாகவும் விடுவித்தலை துரிதப்படுத்துவதற்காக இறக்குமதியாளரினால் மேற்கொள்ளப்பட வேண்டிய நடவடிக்கைகள் பற்றியும் விடுவிக்கும் முகவராண்மைகளினால் இறக்குமதியாளர்களுக்குத் தெரிவிக்கப்படும்.

- **இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் (SLSI) அங்கீகாரத்தை வேண்டி நிற்கும் சரக்குத் தொகுதிகள் தொடர்பாக கையாளப்படும் முறைமை:**

  1969 ஆம் ஆண்டின் 01ஆம் இலக்க இறக்குமதி மற்றும் ஏற்றுமதி (கட்டுப்பாட்டுச்) சட்டத்தின் கீழ் வெளியிடப்பட்ட 2014.01.08 ஆந் திகதிய 1844/49 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகை அறிவிப்பின் படி இலங்கைத் தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் (SLSI) இறக்குமதிப் பரிசோதனைத் திட்டத்தின் கீழ் உள்ளடக்கப்படும் 120 பொருட்கள் காணப்படுகின்றன. SLSIஇன் அறிக்கைக்கு உட்பட்டு இறக்குமதி உணவுப் பரிசோனைப் பிரிவின் அலுவலர்களினால் சுங்கத்திற்கு வழங்கிய இறுதி விதப்புரைகளுக்கமைய SLSI முடியுமான அளவு மாதிரிகளைப் பெற்றுக்கொண்டால் இறக்குமதி உணவுப் பரிசோதனைப் பிரிவு மாதிரிகள் பெற்றுக்கொள்வதை தவிர்த்துக் கொள்ளும். எனினும் தேவையெனக் கருதும் போது இறக்குமதி உணவுப் பரிசோதனைப் பிரிவுக்கு அவற்றின் மாதிரிகளைப் பெற்றுக் கொள்வதற்கான உரிமையுள்ளது.

- **சட்டபூர்வமான வர்த்தகத்துக்கு வசதியளிப்பதற்கும் சட்டவிரோதமான வர்த்தகத்தை தடுப்பதற்கும் நடைமுறையில் உள்ள முறைமை:**

  ஆரம்பமாக விடுவித்தல் விண்ணப்பங்களில் இணைக்கப்பட்டுள்ள ஆவணங்களின் (மூலச் சான்றிதழ், தர உறுதி, பொருள் ஏற்றப்பட்ட துறைமுக ஆய்வுச் சான்றிதழ், சுகாதாரச் சான்றிதழ், தாவர சுகாதாரச் சான்றிதழ்) நம்பகத்தன்மையை உறுதிப்படுத்துவதற்காக அவை நுண்ணாய்வுக்கு உட்படுத்தப்பட்டு எழுந்தமான பரிசோதனையை அல்லது விபரமான பரிசோதனையை மேற்கொள்வதா என்பது தீர்மானிக்கப்பட்டு அதற்கமைவாக நடவடிக்கை மேற்கொள்ளப்படும். உணவுப் பொருட்களின் இடர் முகாமைத்துவத்தைப் பொருத்தமட்டில் அவற்றை உயர்ந்த, நடுத்தர மற்றும் குறைந்த இடர்களைக் கொண்டுள்ளவைகள் என மூன்று வகுதிகளுக்கு உள்ளடக்கப்படுகின்றன. உயர் இடர்நிலையுடைய உற்பத்திகள் விபரமான பரிசோதனைக்கும் நடுத்தர இடர்நிலையுடைய உற்பத்திகள் குறைந்தளவு விபரமான பரிசோதனைக்கும் குறைந்த இடர்நிலையுடைய உற்பத்திகள் எழுந்தமான பரிசோதனைக்கும் உட்படுத்தப்படுகின்றன. அவ்வாறு பரிசோதிக்கப்பட்ட உயர் இடர்நிலையுடைய உற்பத்திகள் தொடர்ந்தும் திருப்திகரமான முடிவுகளைத் தருமாயின் பரிசோதனைத் திட்டம் கண்காணிப்பு பரிசோதனையொன்றாக மாத்திரம் தளர்த்தப்படுகிறது. மாறாக உயர் இடர் நிலையுடைய உற்பத்தி தொடர்பாக மோசமான நிலைமகள் கள அவதானிப்புகளின் மூலம் வெளிவந்தால் அந்த உற்பத்தி தொடர்பான பரிசோதனை, மாதிரி எடுப்பு மற்றும் பகுப்பாய்வு

தீவிரப்படுத்தப்படுகின்றது.உணவுக் கட்டுப்பாட்டு நிருவாகத்துக்கு எந்த பரஸ்பர உடன்படிக்கைகள் பற்றியும் தெரியப்படுத்தப்படவில்லை. ஏற்றுமதி செய்யப்படும் நாடுகளில் உள்ள இணைந்த ஆய்வுகூடங்களை அறிந்துகொள்வதற்கான எந்த முறைமையும் இது வரையில் நடைமுறையில் இல்லை.

உண்மையான இறக்குமதியாளர்களை சுங்கம் அவர்களின் பதிவுகள் மற்றும் பொருத்தமன கொடுக்கல் வாங்கல் மூலம் அறிந்து கொள்ளும்.

- **முதலீட்டுச் சபைக் கம்பனிகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட உரிய அனுப்பு பொருள்களின் தற்போதைய நிலைமை :**

  சுங்க அதிகாரசபை கம்பனிகளின் தன்மையையும் அவற்றிற்கு வழங்கப்படும் சிறப்புரிமைகள் பற்றியும் தீர்மானிக்கும். தெளிவாகவே அதிகமான அனுப்புபொருள்கள் நேரடியாகவே அனுப்புப் பெறுநருக்கு விடுவிக்கப்படுவதுடன் சிலவற்றை நிதிப் புலனாய்வுப் பிரிவின் (IFIU) பரிசீலனைக்காக ஆற்றுப்படுத்தப்படுகிறது. அவை சாதாரண பரிசீலனைக்கும் அத்துடன் தேவைப்படின் பின்னாய்வுக்கும் உட்படுத்தப்படுகின்றன.

- **திணைக்களத்தால் இறக்குமதியாளர்களிடமிருந்து அறவிடப்படும் கட்டணங்கள் :**

  பரிசோதனை நடவடிக்கைகளுக்காக எந்த கட்டணமும் அறவிடப்படுவதில்லை. எனினும் ஆய்வுகூட பகுப்பாய்வுக்காக மாதிரிகள் எடுக்கப்பட்டால் ஆய்வுகூடக் கட்டணங்கள் இறக்குமதியாளர்களால் செலுத்தப்படும்.

**5. வினாக்கொத்துக்கு இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனம் (SLSI) பின்வருமாறு பதிலளித்துள்ளது**

- **அந்த தெரிவு செய்யப்பட்ட இறக்குமதிகளின் தராதரங்களை ஊர்ஜிதப்படுத்துவதன் சட்ட அடிப்படையும் குறிக்கோளும் என்ன?**

  குறித்த ஒழுங்குவிதிகள் இறக்குமதி மற்றும் ஏற்றுமதி கட்டுப்பாட்டுச் சட்டத்தின் கீழ் வகுக்கப்பட்டுள்ளன. 2014 சனவரி 08 ஆந் திகதிய 1813/14 ஆம் இலக்க அதி விசேட வர்த்தமானப் பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட இறக்குமதி (தரப்படுத்தலும் தரக்கட்டுப்பாடும்) ஒழுங்குவிதியே நடப்பு ஒழுங்குவிதியாகும். வாடிக்கையாளர்கள் பாதுகாக்கப்பட இனங்காணப்பட்ட உற்பத்திகள் இலங்கை தராதரங்களுக்கு ஒத்திசைவாக இருப்பதை உறுதி செய்யவதே தராதரங்களை ஊர்ஜிதப்படுத்துவதன் குறிக்கோளாகும்.

- **2015 இலும் 2016 இன் முதல் அரையாண்டிலும் இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்தின் அங்கீகாரம் தேவைப்பட்ட இறக்குமதி அனுப்பு பொருள்களின் மொத்த எண்ணிக்கை யாது?**

  2015 இல்: 16162 அனுப்புபொருள்கள்

  சனவரி தொடக்கம் ஜூன் வரை: 9455 அனுப்புபொருள்கள்

- **சுங்கத்துடனும் இறக்குமதியாளர்களுடனும் பணியாற்றுவதற்காக தற்போது மேற்கொண்டுள்ள நடவடிக்கை யாது / ICT ஊடாக முறைமையை மேம்படுத்த மேற்கொள்ளப்பட்டுள்ள நடவடிக்கைகள் யாது?**

  "ஒரு முகச் செயல்திட்டம் (Single Window System)" என்ற எண்ணக்கருவை அமுல்படுத்துவதற்காக நாம் சுங்கத்துடன் இணைந்து செயற்படுகிறோம். VPN இணைப்பொன்றை ஏற்படுத்தி திருப்திகரமாக பரீட்சித்துப் பார்க்கப்பட்டது. இலங்கை தரக்கட்டுப்பாட்டு நிறுவனத்திற்கு (SLSI) வேண்டிய இறக்குமதி தொடர்பான சுங்கப் பிரகடனத்தில் (CUSDEC) காணப்படாத மேலதிக தகவல்களை பெற்றுக் கொள்வதற்காகவும் மின்னியல் மூலமாக இறக்குமதியாளர் SLSI இற்கு தேவையான ஆவணங்களை அனுப்புவதை வசதிப்படுத்துவதற்காகவும் சுங்கம் ஒரு இணையத்தள சேவையொன்றை உருவாக்கியது. முறைமையை மேலும் மேம்படுத்துவதற்காக அது பற்றிய பின்னூட்டல் இந்த வாரம் சுங்கத்துக்கு வழங்கப்படும். மேலும் ஏற்கனவே ஆரமபிக்கப்படுள்ள SLSI இன் இணையத்தளத்தின் புதுப்பிப்பத்தல் மூலமாக மின்னியல் கட்டண முறைமையை (Electronic Payment System) உருவாக்குவதற்காக SLSI செயலாற்றிக் கொண்டிருக்கிறது.

  ஒரு முகச் செயல்திட்டத்தை வெற்றிகரமாக அமுல்படுத்தவும் மேலும் இடர் அடிப்படையிலான அணுகுமுறையை மேம்படுத்தும் அதேவேளை செயற்பாடுகளின் வினைத்திறனை அதிகரிக்கவும் பணிகளை தன்னியக்கமாக்குவதன் தேவையை SLSI உணர்ந்தது. வர்த்தக வசதியளிப்பு உடன்படிக்கையை அமுல்படுத்துவது தொடர்பாக இந்த மாதம் விஜயம் மேற்கொள்ளவிருக்கும் உலக வங்கிப் பிரதிநிகள் குழுவுக்கு சமர்ப்பிப்பதற்காக SLSI சுங்கத்திற்கு ஏற்கனவே ஒரு முன்மொழிவை சமர்ப்பித்துள்ளது.

- **உணவுச் சட்டத்தின் கீழ் அங்கீகாரம் தேவைப்படுகின்ற அனுப்பு பொருள்கள் தொடர்பாக சுகாதார அமைச்சுடன் எவ்வாறு பணியாற்றுகிறீர்கள்?**

பாதுகாப்பு உள்ளடங்கலாக அதிக அளவிலான உணவுப் உற்பத்திகளின் தரத்தை உறுதி செய்வது சுகாதார அமைச்சின் பொறுப்பாக காணப்படும் அதேவேளை SLSI இனால் செயற்படுத்தப்படும் பரிசோதனைக்கு குறித்த சில உணவுப்பொருட்களை உள்ளடக்குவது குறித்த திட்டத்தின் கீழ் உற்பத்திகளின் உன்னிப்பான கண்காணிப்பை இயலச்செய்கிறது. தகரத்தில் அடைக்கப்பட்ட மீன் இதற்கான சிறந்த உதாரணமாகும்.

SLSI இறக்குமதி பரிசோதனை திட்டத்தை நடைமுறைப்படுத்துவதன் மூலம் உணவுப் உற்பத்திகள் இலங்ககைக்குரிய தராதரங்களுடன் ஒத்திசைவாக உள்ளதா என்பதை மதிப்பிடுவது மாத்திரமன்றி குறித்த உற்பத்திகள் உணவுச் சட்டத்தின் கீழ் விதிக்கப்பட்டுள்ள ஒழுங்குவிதிகளுடனும் ஒத்திசைவாக உள்ளதா என்பதையும் உறுதிசெய்கிறது. அத்தகைய உற்பத்திகள் தொடர்பான விடயங்களில் SLSI சுகாதார அமைச்சுடன் மிக நெருக்கமான செயற்படுகிறது (அதேபோன்று உணவு மற்றும் ஏனைய உற்பத்திகள் தொடர்பாக SLSI ஏனைய சான்றளிப்புத் திட்டங்களை மேற்கொள்கிறது). தேவைப்படும் போது விசேட கூட்டங்களும் கூட்டப்படும். அதேபோன்று பணிகளின் இரட்டிப்பு ஏற்படாமல் இருப்பதை உறுதிசெய்வதற்கு SLSI சுகாதார அமைச்சுடன் இணைந்தும் செயற்படுகிறது. மேலும் SLSI சுகாதார அமைச்சின் உணவு ஆலோசனைக் குழுவின் ஒர் உறுப்பினராகும். இந்தக் குழு ஊடாக அவசியமான கொள்கை விடயங்களும் சுகாதார அமைச்சின் கவனத்துக்கு கொண்டுவரப்படுகின்றன.

அனுப்பு பொருள்களுடன் தொடர்புடைய ஏதும் மறுப்பு/ பிரச்சினை உள்ள போது அது சுகாதார அமைச்சுக்கு எழுத்து மூலம் தெரியப்படுத்தப்படும். உணவுச் சட்டத்தின் கீழ் வரும் உற்பத்திகளுக்கான தேவையான அங்கீகாரமும் பெறப்பட்டுள்ளது என்பதை சுங்கம் உறுதி செய்கிறது என்பது குறிப்பிடப்பட்டது.

- **சட்டபூர்வமான வர்த்தகத்துக்கு வசதியளிப்பதற்கும் சட்டவிரோதமான வர்த்தகத்தை தடுப்பதற்கும் நடைமுறையில் உள்ள இடர் முகாமைத்துவ முறைமை என்ன? சட்டபூர்வமான வர்த்தகத்துக்கு வசதியளிப்பதற்கு ஏற்றுமதி செய்யும் நாடுகளுடன் ஏதாவது பரஸ்பர அங்கீகார உடன்படிக்கைகள் / முறைமைகள் நடைமுறையில் உள்ளதா? ஏற்றுமதி செய்யும் நாடுகளில் உள்ள இணைந்த ஆய்வுகூடங்கள் மூலம் வழங்கப்பட்ட சான்றிதழ்களை அங்கீகரிபதற்கான ஏதும் முறைமை நடைமுறையில் உள்ளதா?**

பண்டங்கள் இலங்கையின் உரிய தராதரங்களுக்கு ஒத்திசைவாக உள்ளது என்பதை உறுதிசெய்வதே இந்த திட்டத்தின் முக்கிய குறிக்கோளாகும். அதற்கமைய கீழ்வரும் சந்தர்ப்பங்களில் சட்டபூர்வமான வர்த்தகத்தகத்துக்கு வசதியளிப்பதற்காகவும் ஊர்ஜிதப்படுத்தும் நோக்கங்களுக்காகவும் மாத்திரம் எழுந்தமாக தெரிவு செய்யப்பட்ட அனுப்பு பொருள்களின் மாதிரிகளை பெற்றுக்கொண்டு அனுப்பு பொருள்கள் விற்பனைக்காக விடுவிக்கப்படும். அத்தகைய சந்தர்ப்பங்களின் போது அனுப்பு பொருள்களின் மாதிரிகள் பெற்றுக்கொண்டதன் பினனர் விற்பனைக்காக விடுவிக்கப்படும்.

அ) இலங்கை தரத்துக்கு அமைவாக ஏற்றுமதி செய்யும் நாடுகளில் உள்ள ஏற்றுக்கொள்ளப்பட்ட ஆய்வுகூடங்களால் வழங்கப்பட்ட சோதனைச் சான்றிதழுடன் அனுப்புபொருள்கள் வரும் போது,

ஆ) ஏற்றுமதி செய்யும் நாட்டில் சான்றளிப்பதற்காக பயன்படுத்தப்படும் தரம் இலங்கை தரத்துடன் ஒப்பிடக்கூடியதாக இருக்குமிடத்து அந்த நாட்டின் உற்பத்திச் சான்றிதழ் அடையாளத்தை குறித்த உற்பத்தி கொண்டுள்ள போது,

இ) SLSI உடன் பதிவு செய்யப்பட்ட திருப்திகரமான கடந்த கால செயலாற்றுகையையும் ISO 9001தரச் சான்றிதழையும் அல்லது உணவு சம்பந்தமாக ISO 22000 உணவுப் பாதுகாப்பு சான்றளிப்பையும் கொண்டுள்ள உற்பத்தியாளரொருவர் மூலமக குறித்த உற்பத்தி வருகின்றது என்ற அடிப்படையில், இவ்வாறான சந்தர்ப்பங்களில் உற்பத்தியாளரின் சொந்த சான்றிதழ்கள் ஏற்றுக்கொள்ளப்படுகின்றது.

மேலே சந்தர்ப்பங்களின் போதும் அதே போன்று உற்பத்தியாளர்களை பதிவு செய்வதற்காக பல திருப்திகரமான அனுப்பு பொருள்களை பரிசீலிக்கும் போதும் மாதிரிகளைப் பெற்றுக்கொள்ள வேண்டிய தடவைகள் தொடர்பாக தீர்மானிக்கும் போதும் இடர் அடிப்படையிலான அணுகுமுறை பயன்படுத்தப்படுகிறது.

- **முதலீட்டுச் சபைக் கம்பனிகள் மூலம் இறக்குமதி செய்யப்பட்ட உரிய அனுப்பு பொருள்களின் தற்போதைய நிலைமை ?**

திட்டத்தை செயற்படுத்தும் போது கீழ்காணும் இரண்டு நிலைமைகளுக்கு முகம்கொடுக்க நேரிடுகிறது மற்றும் அதிலே குறிப்பிட்டுள்ளவாறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்படுகின்றன.

அ) மீளஏற்றுமதிக்காக முதலீட்டுச் சபைக் கம்பனியொன்றினால் இறக்குமதி செய்யப்படும் மூலப் பொருட்கள்: இந்த உற்பத்திகளுக்கான ஒத்திசைவு மதிப்பீடு மேற்கொள்ளாது விற்பனைக்காக விடுவிக்கப்படும்.

ஆ) முதலீட்டுச் சபைக் கம்பனியொன்றின் நிர்மாணப் பணிக்காக இறக்குமதி செய்யப்பட்ட உற்பத்திகள்: பண்டங்கள் முதலீட்டுச் சபையின் கருத்திட்டத்திற்கானது என்பதற்கான போதியளவு சான்றுகள் பெற்றுக்கொள்ளப்பட்டதன் பின்னர் அனுப்பு பொருள்களுக்கான தரச் சோதனையை மேற்கொள்ளாது தெரிவு செய்யப்பட்ட கருத்திட்டங்களின் மாதிரிகள் பெறப்பட்டு முதலீட்டுச் சபையின் செயற்பாடுகளுக்கு வசதியளிப்பதற்காக அவை விடுவிக்கப்பட்டுள்ளன. அவ்வாறு பெற்றுக்கொள்ளப்பட்ட தரவுகளை உரிய பங்குதாரர்களுடன் இணைந்து எதிர்காலத்தில் முடிபுகளின் மீளாய்வுக்காக பயன்படுத்தப்படும்.

- **இறக்குமதியாளர்களிடமிருந்து திணைக்களத்தினால் அறவிடப்பட்ட கட்டணங்கள் யாவை? அத்தகைய கட்டணங்களுக்கான கொள்கை / நியாயவாதம் யாது?**

  அறிவித்தல் செயன்முறைக்காகவும், பரிசோதிப்பதற்காகவும் இடப்பெயர்ச்சிக்காவும் பரீட்சிப்பதற்காகவும் கட்டணங்கள் அறவிடப்படுகின்றன. உற்பத்தியாளர்களை பதிவுசெய்வதுடன் தொடர்பான கட்டணங்கள் - விண்ணப்பங்களை பகுப்பதற்கும் பதிவு செய்வதற்குமான கட்டணம். ஆய்வுகூடப் பதிவுகள் தொடர்பான கட்டணங்கள் - விண்ணப்பங்களை பகுப்பதற்கும் (ஏற்றுக்கொள்ளப்படாத ஆய்வுகூடத்தின் கணக்காய்வு சந்தர்ப்பத்தில் - 11 செலவுகள் (அதாவது வான் கட்டணம், தங்குமிடவசதி, கணக்காய்வுக் கட்டணம், அரசாங்கத்தால் அங்கீக்கப்பட்ட நாளொன்றுக்காக கட்டணங்கள், விசாக் கட்டணங்கள்)

  வழங்கப்படும் சேவைகளுக்கான செலவுகளை மீளப்பெற்றுக் கொள்வதற்காகவே கட்டணங்கள் அறவிடப்படுகின்றன.

**6. குழுவால் அனுப்பப்பட்ட வினாக்கொத்துக்கு இலங்கை முதலீட்டுச் சபை பின்வருமாறு பதிலளித்துள்ளது**

- **முதலீட்டுச் சபை ஊடாக 2015 மற்றும் 2016 முதல் அரையாண்டு காலப்பகுதியில் இறக்குமதி தொடர்பான சுங்கப் பிரகடனத்திற்கிணங்க (CusDecs) இறக்குமதி செய்யப்பட்ட அனுப்பு பொருள்களின் மொத்த எண்ணிக்கை யாது?**

  முதலீட்டுச் சபை ஊடாக 2015 மற்றும் 2016 முதல் அரையாண்டு காலப்பகுதியில் இறக்குமதி தொடர்பான சுங்கப் பிரகடனத்திற்கிணங்க (CusDecs) இறக்குமதி செய்யப்பட்ட அனுப்பு பொருள்களின் மொத்த எண்ணிக்கை முறையே 233, 320 மற்றும் 114,169 ஆகும் (பின்னிணைப்பு I )

- **2015 மற்றும் 2016 முதல் அரையாண்டு காலப்பகுதியில் ஆவணங்களை ஊர்ஜிதம்/ சோதனை செய்யாமல் விடுவிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அனுப்புப் பொருள்களின் மொத்த எண்ணிக்கை யாது?**

  முதலீட்டுச் சபை கம்பனிகள் இறக்குமதி சுங்க பிரகடனத்துடன் இறக்குமதி செய்யப்படுகின்ற பொருள்கள் பற்றிய கப்பல் ஆவணங்களின் தேவையான அனைத்து வன்பிரதிகளையும் சமர்ப்பிப்பதற்கு தேவைப்படுத்தப்படுகின்றன. தற்போது ஆவணங்களை ஊர்ஜிதம் செய்யாது எந்த அனுப்பு பொருள்களையும் விடுவிக்க முடியாது.

- **2015 மற்றும் 2016 முதல் அரையாண்டு காலப்பகுதியில் சரக்கை ஊர்ஜிதம்/ சோதனை செய்யாது விடுவிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அனுப்பு பொருள்களின் மொத்த எண்ணிக்கை யாது?**

  2015 மற்றும் 2016 முதல் அரையாண்டு காலப்பகுதியில் சரக்கை ஊர்ஜிதம்/சோதனை செய்யாது விடுவிக்கப்பட்ட இறக்குமதி செய்யப்பட்ட அனுப்பு பொருள்களின் மொத்த எண்ணிக்கை முறையே 12,536 மற்றும் 6,385 ஆகும் (பின்னிணைப்பு II)

- **2015 மற்றும் 2016 முதல் அரையாண்டு காலப்பகுதியில் சட்டவிரோத இறக்குமதிகளாக கண்டுபிடிக்கப்பட்ட அனுப்பு பொருள்களின் (தற்போது விசாரணைக்கு உட்படுத்தப்பட்டுள்ளவைகள் உள்ளடங்கலாக) மொத்த எண்ணிக்கை யாது?**

  முதலீட்டுச் சபை 2015 ஆம் ஆண்டில் எந்த சட்டவிரோத இறக்குமதியையும் கண்டுபிடிக்கவில்லை அத்தோடு 2016 ஜூன் M/S Concord Apparel (Pvt) Ltd ஆல் இறக்குமதி செய்யப்பட்ட ஒரு அனுப்பு பொருள் கண்டுபிடிக்கப்பட்டிருக்கிறது என்பதுடன் தற்போது சுங்கம் இது தொடர்பாக விசாரணைகளை முன்னெடுத்து வருகின்றது.

- **சட்டபூர்வமான வர்த்தகத்துக்கு வசதியளிப்பதற்கும் சட்டவிரோதமான வர்த்தகத்தை தடுப்பதற்கும் நடைமுறையில் உள்ள இடர் முகாமைத்துவ முறைமை என்ன?**

  இறக்குமதிகள் தொடர்பாக இலங்கை சுங்கம் இடர் முகாமைத்துவ முறைமையை அமுல்படுத்தியுள்ளது. முதலீட்டுச் சபை இறக்குமதிகளும் இந்த முறைமை ஊடாக பரிசோதிக்கப்படுகின்றன.

- **ஒரு முகச் செயல்திட்ட முறைமையின் (Single Window System) தற்போதைய நிலை என்ன?**

ஒரு முகச் செயல்திட்ட முறைமை இலங்கைச் சுங்கத்தினால் தற்போது கையாளப்படுகிறது. ஏற்றுமதி அபிவிருத்தி சபையின் வர்த்தக வசதியளிப்பு பற்றிய ஆலோசனைக் குழுவினால் கௌரவ நிதி அமைச்சருக்கு அனுப்பப்பட்ட முன்மொழிவு உங்கள் தகவலுக்காக இணைக்கப்பட்டுள்ளது.

- **ஏனைய சட்டங்களின் (உ+ம். ஏற்றுமதி மற்றும் இறக்குமதி (கட்டுப்பாட்டுச்) சட்டம்) கீழ் கட்டுப்படுத்தப்பட்டுள்ள ஏற்றுமதிகளையும் இறக்குமதிகளையும் விடுவிப்பதற்கான தற்போதைய சட்ட நிலைப்பாடும் நடவடிக்கைமுறையும் என்ன?**

இறக்குமதி மற்றும் ஏற்றுமதி உரிமம் (ICL) / ஏற்றுமதி அனுமதி என்று இலங்கை சுங்கத்தின் கொள்கை, திட்டமிடல் மற்றும் ஆய்வுக்கான நிலையத்தினால் பிரசுரிக்கப்பட்ட தேசிய இறுப்பு வழிகாட்டியில் குறிப்பிடப்பட்டுள்ளவாறு முன் அங்கீகாரம் / அனுமதி/ உரிமம் ஆகியவற்றைப் பெற்றுக்கொள்ள முதலீட்டுச் சபை கம்பனிகள் தேவைப்படுத்தப்படுகின்றன.